எழுத்துரிமை காக்க விரைவில் அறப்போர்!

திராவிடநாடு

மலர் 9 || 30-7-50 | இதழ் 5

இலங்கை 15 சதம்] விலை அணா இரண்டு [மலாய் நாடு 12 காசு

பொறுத்தது போதும் இனிச் சகியோம்!

ஆட்சியாளருக்கு எச்சரிக்கை

சென்னையில் மக்கள் முரசொலி!

கடலலைகளென மக்கள் ஆரவாரித்தனர்—“அடக்குமுறைக்கு ஆளாகினோம்—இந்த ஆட்சியின் போக்கை இனிச் சகியோம்” என்று கூறுவது போல, எல்லோரும் கைகளைத் தூக்கி கருத்துக்களை வெளியிட்டனர். அதிருப்தியும் வெறுப்பும், ஆளவந்தாரின் போக்கு குறித்து எவ்வளவு தூரம் மக்கள் மன்றத்தில் வளர்ந்து கிடக்கிறது என்பதை அவர்கள் எழுப்பிய முழக்கம் முரசொலித்தது!

✲

“வேண்டுமென்றே நமதியக்க நூல்களைத் தடை செய்கின்றனர். எழுதுகிற தோழர்கள் மீதும், அச்சடித்து வெளியிடுவோர் மீதும் அடக்குமுறை அம்புகளை வீசுகின்றனர்—வழக்குத் தொடர்ந்து, வம்புக்கு ஆளாக்குகின்றனர்.

எழுத்துரிமையின் மீது வீசப்படும் ஈட்டித் தாக்குதலாகும் இது. ஆளவந்தாரின் இந்த அட்டகாசச் செயலை, இனியும் நாம் அனுமதிப்போம் என்று கருதல் வேண்டாம்.

எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் பேசி—அவைகளுக்காகப் போரிட்டு ஆட்சி பீடமமர்ந்தோர் தான் இன்றைய காங்கிரஸ் ஆளவந்தார்கள் எனினும் அதிகாரம் கையிலிருப்பதால மாற்றுக் கட்சியினர் பேனாவையும், எழுத்தையும் தடுத்து முறித்துவிடலாம்—என்ற முயற்சியிலீடுபட்டு வருகின்றனர். இதன் விளைவாகவே, நமதியக்க நூல்கள் மீது தடையுத்தரவும், அவைகளை எழுதிய ஆசிரியர்கள் மீதும் வெளியிட்டோர் மீதும் வழக்குத் தொடர்ந்தும், விடாது தொல்லைகள் தந்து வருகின்றனர்.

• இதுவரையில் பொறுத்திருந்து விட்டோம்—இனியும் பொறுத்துப் போவதாக எண்ணமில்லை. உரிமையை நிலை நாட்ட, உரிமைப் போர் தொடுக்கத் தயங்கோம்.

எழுத்துரிமையைப் பறிக்கும் ஆளவந்தாரின் போக்கை எதிர்த்து விரைவில் உரிமைப் போர், துவக்கத்தான் போகிறோம். அதற்கான யோசனைகளைச் செய்துதான் வருகிறோம். இதை உணரட்டும் ஆளவந்தார்”

என்ற கருத்துப்பட 23—7—50 அன்று நடைபெற்ற இந்தி எதிர்ப்பு நாள் களிப்புக் கூட்டத்தில், சென்னையில் சொற்பொழிவாற்றிய திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் சி. என். ஏ. வெளியிட்டார்.

“உரிமை நமது மூச்சு அதைப் பெறும் போருக்கு எத்தனை பேர் அணிவகுப்பீர்!” என்று பொதுச் செயலாளர் கேட்டபோதுதான், வெள்ளம்போல் குழுமிக் கிடந்த மக்கள் ஆரவாரித்தனர். தினவெடுத்த வீரர்கள் ‘எப்போது, போர்?’ என்று கேட்பதுபோன்ற காட்சி—அங்கு காணக் கிடைத்தது.

எழுத்துரிமையைப் பறிக்கும் வகையில் விடாது நம்மியக்கத்தவர் மீது அடக்குமுறையை வீசி வரும் ஆளவந்தாரின் போக்கை இனியும் இப்படியே விட்டுவிடக் கூடாது—விட்டுவிடும் நோக்கமும் இல்லை என்று கூறுவதுபோல, பொதுச் செயலாளரின் தகவல் கேட்ட மக்களிடை, அலையோசையென மகிழ்ச்சிக் கொந்தளிப்பு ஏற்பட்டது.

“கட்டாய இந்திப் போரில் வெற்றி பெற்றுவிட்டோம்—வீணர்கள் என்று கேலி பேசிய ஆளவந்தார் இன்று நம் கோரிக்கைக்குத் தலை சாய்த்து விட்டனர். எடுத்த போர் எதிலும் இதுவரை நாம் பின்வாங்கியதில்லை! உரிமைப் போர் துவக்கினும் வெற்றி பெற்றே தீருவோம்—காரணம் நமது போக்கு வீம்பின் விளைவல்ல; நியாயம் நேர்மை இரண்டையும் அடிப்படையாகக் கொண்டது. ஆகவே, இந்த ஆளவந்தாரின் அடக்குமுறைப் போக்குக்கு பாடங் கற்பிக்க வேண்டிய அவசியமும் பொறுப்பும் நம்மைச் சேர்ந்திருக்கிறது” என்ற கருத்துப்பட மேலும் பேசிய பொதுச் செயலாளர், வெளியிட்டபோது—வெற்றிக் களிப்பில் மூழ்கிக் கிடந்த மக்கள், மீண்டும் வீரமுழக்கமிட்டனர்.

(கிருபர்.)

“அகிம்சா” ஆட்சியின், அழகினைப் பாரீர்!

திடுக்கிடாதீர்கள்! — நூல் எழுதிய குற்றத்திற்காகவும், அவைகளைப் பிரசுரித்த குற்றத்திற்காகவும் தண்டனை பெற்ற தோழர்கள் ஆசைத்தம்பி, கலியபெருமாள், தங்கவேல் ஆகியோரை இந்த ஆளவந்தாரின் ‘கருணை’ ததும்பிய ஆட்சி நடத்தியிருக்கும், முறை, இது!

மொட்டையடித்திருக்கிறது! சாதாரண கிரிமினல் கைதிகளைவிடக் கேவலமாக நடத்தியிருக்கிறது. நண்பர் ஆசைத்தம்பி, விருதுநகர் நகர மக்களின் பிரதிநிதி — “தனியரசு” மாதப் பத்திரிகையின் ஆசிரியர், திராவிட முன்னேற்றக்கழகத்தின் செயற்குழு உறுப்பினர். அவரை, இந்த முறையில் அலங்கோலமாக்கி இருக்கிறது, அரசாங்கம்! துறையூர் தோழர்களும், மக்களிடை மானமுடன் வாழ்ந்து வருபவர்கள்—வியாபாரிகள்! இவர்கள்—திருடவில்லை, பொய் சொல்லவில்லை, ஆளவந்தாரைக் கவிழ்க்கச் ‘சதி’ செய்யவில்லை! சாதாரணமானது—நூல் எழுதியது; அதை வெளியிட்டது! அதற்குச் சிறைவாசம்—அத்து போனதும் இந்தக்கொடுமை!

திருச்சியிலிருந்து, நமக்குக் கிடைத்த செய்திகளைக் காணும்போது நெஞ்சம் துடிக்கிறது—நிலை தடுமாறுகிறது!

தோழர்களுக்கு முசிறி மாஜிஸ்டிரேட் தண்டனை தந்த தேதி 19. தீர்ப்பு அறிவிக்கப் பட்டதும், முசிறி சப்ஜெயிலில மூவரும் அடைக்கப்பட்டு 21-ந்தேதி வெள்ளியன்று, திருச்சி மத்தியசிறைக்கு கொண்டுவரப்பட்டு ‘அவுட்குவாரன்டைன்’ பகுதியில கொண்டுபோய் அடைக்கப்பட்டனர்.

தீர்ப்பு விபரம் தெரிந்ததுமே ‘ஜட்ஜ்மெண்ட் காப்பி’ கோரி மனுகொடுக்கப் பட்டது. 20-ந்தேதியன்று தீர்ப்பின் விபரம் கிடைத்ததால் 21-ந்தேதியன்று வழக்கறிஞர் விருதாசலம் அவர்களைக் கொண்டு அப்பீல தாக்கல் செய்ததோடு ஜாமீனில் விடுதலை செய்யுமாறும் மனு செய்துகொள்ளப்பட்டது.

21—7—50 அன்றைய தினமே, ஜாமீனில் விடுதலை செய்யுமாறு செஷன்ஸ் ஜட்ஜ் உத்தரவு பிறப்பித்தார். ஆனால் டிப்டி கலெக்டரின் கையெழுத்துக்காக முசிறிக்குச் செல்லவேண்டியிருந்தது.

வழக்கு அப்பீல் செய்திருக்கிறோம்!

ஜாமீன் உத்தரவும் கிடைத்திருக்கிறது!

இருந்தும் 22-7—50 சனியன்று, தண்டனை அடைந்த தோழர்களைச்சிறை அதிகாரிகள், கட்டாயப்படுத்தி மொட்டையடித்திருக்கின்றனர்!

“ஜாமீன் உத்தரவு கிடைத்துவிட்டது. இன்று மூன்றாவது சனிக்கிழமையாதலால் சர்க்கார் விடுமுறையாகப் போயிற்று! நாளை ஞாயறு—ஆகவே திங்களன்று நாங்கள் சிறையிலிருந்து வெளியேபோய்விடப் போகிறோம்—வேண்டாம் இது” என்று எவ்வளவோ, கேட்டுக்கொண்டும் “அதிகாரதேவதைகள்” தங்கள் “திருக்கைங்கரியத்தைச்” செய்யத் தயங்கவில்லை! மொட்டையடித்தே விட்டிருக்கின்றனர்!!

அதுமட்டுமல்ல, குவாரன்டைன் பகுதியில் தோழர்களின் ஆடைகள்யாவும் அகற்றப்பட்டனவாம்! புராதனகாலத்து ‘ஜீன்சவார்’ உடைதான் கொடுக்கப்பட்டதாம். ஜாமீனில், விடுதலையாகும் வரை அந்த ‘கால்முழத்துடன்’தான் இருக்க நேர்ந்ததாம்!

அவர்கள் சூதர்களல்ல; மனித சமுதாயத்தை வாழ்விக்கப் பாடுபடும் தூதர்கள்! தேசத்தொண்டர்கள்—நாட்டின் வீரர்கள்! அவர்களைக் கிரிமினல் கைதியை விடக்கேவலமாக நடத்தியிருக்கின்றனர், அரசாங்கத்தார். ‘அஹிம்சை! அகிம்சை! நேர்மைக்கொள்கை!’ என்றெல்லாம் வார்த்தைகள் நெஞ்சில் புரண்டாலும், “இக்காட்சியைப் பாருங்கள்! பொதுமக்களே—நேர்மையாளரே, இக்காட்சியைக் கவனித்துப் பாருங்கள்! என்ன, குற்றம் செய்தனர்—இவர்கள்! எதற்காக இவ்வளவு சித்திரவதைக்கு ஆளாகவேண்டும்—அவர்கள் உள்ளங்களை!

அடுக்குமா, இது? நல்லாட்சியின் அழகு தானா? நாட்டில் வீரமுழக்கம் செய்து இன்று ஆட்சிப்பீடமர்ந்திருப்போர்—இப்படித் தானா எதிர்க்கட்சியினரை நடத்துவது? கிரிமினல் கைதிகளைவிடக்கேவலமாக நடத்தியிருக்கின்றனர்! ஜாமீனில் விடுதலையாகப்போகின்றனர் என்பது தெரிந்தும், மொட்டை அடித்திருக்கின்றனர்—விஷயத்தை பலமுறை கூறியும் வம்போடேதான் கொண்டிருக்கின்றனர்! இதுதான் சுதந்திர ஆட்சியா? சுயராஜ்யபூமியா? உரிமைவாழ்வா? என்பதைப்பாருங்கள்! அகிம்சா வாதிகளின் ‘அருமையான’ ஆட்சி முறையைப் பாருங்கள்!” என்பதை மட்டும், வேதனையோடு வெளியிடுகிறோம்!

★ முன்ஷி மார்க்கம் ★

விரதம் எடுத்துக் கொள்ளுங்கள், மாதர்களே—திங்கட்கிழமை யன்று காய்கறிகளை தவிர இதர தானியங்களை சமைப்பதில்லையென்று! —புண்ணியம் உண்டு.

உணவுப் பழக்கத்தை மாற்றிக் கொள்ளாத வரையில் உருப்பட வழியில்லை.

நவநாகரீகம் எதற்கும் குறுக்கிடும்—அதனைத் தூக்கி எறிந்திட வேண்டும்.

விருந்து வேண்டாம்—அதில் அதிகம் செலவு செய்துவிட்டு வருந்தவும் வேண்டாம்.

பொறுப்புணர்ச்சி தேவை—வயிற்றை ஈரத்துணியால் இறுக்கிக் கட்டென்றால் கட்டிவிட வேண்டும். எதிர்த்துப் பேசக்கூடாது.

தேவை, தேவை—உடனே தேவை! தியாகிகள் தேவை—உணவைத் தியாகம் செய்யும் உத்தமர்கள் தேவை.

மழை வேண்டும் — மக்கள் மகிழவேண்டும். ஆகவே மரம் வளர்க்கவேண்டும்.

பட்டினியால் எவரும் செத்து மடிய விடேன். நானிருக்க பயமேன்?

ஒன்றுமே தெரியாதவர்கள் நாங்கள் என்று மக்கள் நினைக்கிறார்கள். அது தவறு — நாங்கள் சகல கலா வல்லவர்கள். மக்கள் இதனைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

—இவை புத்தரின் பொன்மொழிகளுமல்ல, நபிகள் நாயகம் அருளிய நல்லுரைகளுமல்ல, பைபிளில் காணும் குறிப்புகளுமல்ல, —இராமானுசர் சொல்லவில்லை, பெரியாழ்வார் பிரபந்தமுமில்லை —புதிய போதனை. சொல்லியவர் ஆழ்வாருமல்ல, நாயன்மாருமில்லை. அவர் 'கனம்'—ஊருக்கு உபதேசம் புரியும் வேலையைக் கொண்டவரல்ல, ஊராளும் உரிமை பெற்ற மதி மந்திரியார், முன்ஷி—கூறியிருக்கிறார், மேலே காட்டிய கருத்துகளை — ஆனால் இதே வார்த்தைகளிலல்ல!

முன்ஷி மார்க்கம் மிகப் புதியது—மதம் ஏற்படுத்தி வருகிறார் புதிதாக! இல்லாவிட்டால் அவர் இப்படி விசித்திர போதனைகளை வீசியபடி இருக்கமாட்டார்.

* * *

உணவு நிலைமையில் நெருக்கடி ஏற்பட்டது—இன்றுவரை தீர்க்கப்படவே இல்லை. உணவு இலாகாவைக் கண்காணிக்கும் பொறுப்பை யேற்ற தௌலத்ராம் சரிவரத் தம் கடமையைச் செய்யவில்லையென்று குறை கூறினர். அவர் விலகினர். அவருக்கு அடித்தது அடுத்த 'சான்ஸ்', ஒரு மாகாணத்தின் கவர்னராக! முன்ஷி வந்தார், அந்த இடத்திற்கு! இனி 'கனருஷி'யான திட்டங்களை வெளியிட்டு, நமது வாட்டத்தை ஓட்டிவிடுவார் என்று கூறினர். எதிர்பார்த்தோம் எவ்வளவோ, ஏமாந்தோம், அவ்வளவு நம்பிக்கையும் இழந்து!

மழையை இழுக்க அவர் மகோற்சவம் செய்ய வேண்டும் என்று கூறியவுடனேயே இவர் 'கற்கால' கனமாகிவிட்டார் என்று கருத்துள்ளோர் முடிவு கட்டிவிட்டனர். சிரித்துக் கொண்டனர் மனதிற்குள்ளாகவே, வெளியில் சொல்லாவிட்டாலும்!

முன்ஷி மார்க்கம் புதியது மட்டுமில்லை—புரியாததுங்கூட "கனமாகி"விட்ட இவரோ, மழை மதம் ஏற்படுத்திவிட்டார். அதற்கு மாபூஜை செய்யுங்கள் என்று சொல்லிவிட்டார் விளங்காத விசித்திரம்'-வேதனை தரும் அற்புதம்!

* * *

கனம் முன்ஷியாரின் மார்க்கத்திலே அடுத்தபடி உணவுப் பிரச்சினை—அதிலேயும் ஒரு விசித்திரக் கட்டளை போட்டுள்ளார். பசியெடுத்தால் புசியாதலிருங்கள் என்பதைப் போல, வாரத்தில் ஒரு நாள் காய்கறி, கனிகளைத் தின்றுவிடுங்கள்—மற்றவற்றை எண்ணியும் பாராதீர்கள் அன்று—என்று! மழை மதம் அப்படி—சாப்பாட்டு சமயம் இப்படி!

கொஞ்சம் உணவுப் பிரச்சினையைத் தீர்க்கமாக ஆராயவேண்டும். அப்பொழுதுதான் முன்ஷி மார்க்கம் மிகமிக மோசமானது என்று விளங்கும்.

"நம் நாட்டிற்கு வேண்டிய உணவு முழுவதும் 1951-க்குள் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படவேண்டும் என்று சர்க்கார் முடிவு செய்துள்ளனர். அந்தத் தேதிக்குப் பிறகு வெளிநாடுகளிலிருந்து நாம் உணவு இறக்குமதிச் செய்யப் போவதில்லை"—இப்படி பிரதம மந்திரி, பண்டிதநேரு பேசினர், ரேடியோவில், சென்ற 1949 ஜூன் 29-ல்!

தித்திக்கும் தீர்மானம்—ஆனால் சாத்தியமா? சிந்தித்தனர் அறிவாளிகள். பேச்சு போதும், பிரச்சினை தீர வழி யென்று கேட்டனர், பசியால் வாடிய மக்கள். சர்க்காரும் விடை தந்தனர்.

ஐந்தாண்டு உணவு உற்பத்தித் திட்ட அடிப்படையில் நடந்த வேலைகளைக் காட்டினர் சர்க்கார். அப்படியும் பசிபோகவில்லை என்றனர் மக்கள்.

கணக்கிட்டுப் பார்த்தால் 1952 மார்ச் இறுதியில் 49. 2 இலட்சம் டன் உணவு தானியம் பற்றாக் குறையாக இருக்கக் கூடுமென்று தெரிய வருகிறது. இதனைச் சரி செய்ய எல்லா ராஜ்ய சர்க்கார்களோடும் கலந்தாலோசித்து ஆண்டு தோறும் அதிகப்படியாக உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டு நடந்து வருகிறது. இதுவரை 24 இலட்சம் டன் அதிக உற்பத்தி நடந்திருக்கிறது. என்று ஆளவந்தார்கள் கணக்கு சொல்கிறார்கள். மக்களோ, கணக்கு கிடக்கட்டும், "கடும் பசியாகுதே, ஓடாகிய வயிறும் நோகுதே" என்று பாடுகின்றனர்.

சர்க்கார் விழித்துக் கொண்டனர்—கொஞ்சம் விளக்கத்துடன் பேசினர். 1949—50ல் அதிக உற்பத்தி செய்ய வேண்டும் என்று போட்ட திட்டத்தின்படி 9. 85 இலட்சம் டன் வேண்டும். ஆனால் உண்மையில் உற்பத்தி செய்யப்பட்ட அளவு 9 35 இலட்சம் டன். இது இலட்சியத்தில் 95 சத விகிதமாகும் என்றாலும் அதற்காக நிறைவேற்றப்பட்ட காரியங்களைப் பாருங்கள். 97, 1 2 4 கிணறுகள் வெட்டியிருக்கிறோம். 13, 581 அணைகள், கால்வாய்கள், குழாய்க் கிணறுகள் போன்ற சிறு பாசனத் திட்டங்களைப் பூர்த்தி செய்திருக்கிறோம். 17, 380 தண்ணீர் இறைக்க பம்புகள் ஏற்பாடு செய்துள்ளோம். 3,863 குளங்கள் மராமத்து செய்யப்பட்டுள்ளன, எங்கள் முயற்சியில். பல்வேறு இராஜ்யங்களில் மொத்தம் 5,740.19 ஏகரா தரிசு நிலங்கள் திருத்திப் பண் படுத்தியிருக்கிறோம். மத்திய டிராக்டர் ஸ்தாபனம் 71,771 ஏகரா தரிசு நிலத்தை மீட்டுக் கொடுத்திருக்கிறது. 3,44,830 ஏகரா நிலத்தில் யந்திரக் கலப்பைகள் கொண்டு சாகுபடி செய்துள்ளோம். இரசாயன உரமும், பிண்ணாக்கும், பசுந்தாள் உரமும் மொத்தம் 3,06,103 டன் அளித்துள்ளோம். 8,76,000 டன் சேர்க்கை உரம் பயன்படுத்தப்பட்டுள்ளது. மொத்தம் 64,446 டன் உயர்தர வித்துக்கள் அளித்துள்ளோம்......இப்படிப் புள்ளி விவரத்தைக் காட்டி, பொங்கியெழும் மக்களைப் பூரண திருப்தியடையச் செய்ய முயற்சியிலீடுபடுகின்றனர் ஆள்வோர். புள்ளியைக் காட்டி எங்களை கவலையைத் தள்ளிவிட முடியாது. நாங்கள் வாங்குவது அளவரிசி, அத்துடன் 'தசாவதார' தானியங்கள் என்று கோபத்தால் கூவுகின்றனர் பசியால் மாள்வோர்.

* X *

உணவை அதிகப் படுத்த அவர்கள் படும் பாட்டை எடுத்துக் காட்டுகிறார்கள் — அதுதான் முறை! ஆனால் அந்தப் பகுதிக்கு அதிபரோ, விசித்திரமாகப் பேசுகிறார், விபரீதமாக நடக்கிறார் கனம முன்ஷி காட்டும் பாதை—மார்க்கம் பசியெடுத்த மக்களுக்கு ஆத்திரத்தையே உண்டாக்கும்.

காய்கறிகளைச் சமையுங்கள் என்று கன்னியரிடம் பேசுகிறார். உணவைத் தியாகம் செய்யுங்கள் என்று காளையரிடம் வேண்டுகிறார். இந்த இரண்டும் நடந்துவிட்டால் இவர் ஏன் மந்திரியாக இருக்கிறாரோ, நாம் அறியோம், பராபரமே!

மக்கள் தொண்டை மறந்து, மரத் தொண்டை மேற்கொண்ட மந்திரியார் காய்கனிகளைத் தின்று பசியாரக் கற்றுக் கொள்ளுங்கள் என்கிறார். அதுமட்டுமா? உணவுப் பொருள்களை அழித்து வருகின்றன குரங்குகள் என்று, அனுமார் வேட்டையில் ஈடுபட்டுள்ளார்— இராம இராஜ்யத்திலே இராமதூதர்களுக்கு ஆபத்தா என்று கூட எதிர்க்கிறார்களாம்.

விருட்ச விழா
காய்கறி விரதம்
அனுமார் வேட்டை
அரைப் பட்டினி

இப்படி கனம் முன்ஷியாரின் மார்க்க போதனை வளர்ந்து கொண்டே போகிறது.

* * *

பசி வந்திடப் பத்தும் பறந்து போம்—என்பார்கள். ஆம், பம்பாயில், பட்டினிச்சாவு ஏற்படவிடேன் என்று முன்ஷியார் பேசியதைக்குறித்து 'தினசரி'யார் எழுதியுள்ள தலையங்கத்தைப் படித்தாலே போதும்—கடுமை மட்டுமல்ல, வழக்கத்திற்கு அதிகமான காரமும் சேர்ந்துள்ளது. தன் நிலை மறந்து, தன் போக்கையும், நோக்கத்தையுங்கூட நினைவில் நிறுத்தாமல் எழுத்துக்களில் எதிர்ப்பைப்பூட்டி, வார்த்தைகளில் நெருப்பைக் கொட்டி விட்டிருக்கிறது.

ஆளவந்திருப்போர், அரசியல்பேசி அலுத்து விட்டனர். பொருளியலை ஆராய்ந்து களைத்து விட்டனர். சமூக வியலை அலசிச்சலித்து விட்டனர்.

இப்பொழுது எங்கு திரும்பினும் அவர்கள் பேசுவது அரசியல் அல்ல — அரிசியியல்! இந்த அரிசியியலைப்பற்றி எழுதும் பொழுதுதான் தினசரியார் தீப்பிழம்பாக மாறியிருக்கிறார்.

பட்டினிச் சாவு நடைபெறாது என்று முன்ஷியார் கூறுகிறார். பட்டினிகிடந்து செத்து விடாதபடி மக்களை பாதுகாப்பது என்பதுமாத்திரமல்ல சர்க்காரின் பொறுப்பு. கிடைக்கும் சாப்பாடு வயிற்றுக்கு கொஞ்சமாவது போதுமானதாக இருக்க வேண்டும் என்று இடித்துக் காட்டியுள்ளார் தினசரியார்.

8-அவுன்ஸ் 7-அவுன்ஸ் அரிசியாக்கப்பட்டுள்ளது சென்னை மாவட்டத்தில்—அரிசியின்றி மக்கள் அவதிப் படுகின்றனர் இங்கு. நேரில் கண்டு சென்றுள்ளார் கனம் முன்ஷியார். இதற்கு என்ன வழி செய்துள்ளார் அவர் என்று கேட்கிறார் தினசரியார், கோபத்தின் உச்சியில்!

கையாலாகாதது
விஷயம் புரியாதது

இப்படிக்கூட மத்திய சர்க்காரைக் காய்ந்திருக்கிறார், தினசரியார், வெளிநாட்டிலிருந்து உணவுப் பொருள்களை வரவழைக்க, தனிப்பட்ட வர்த்தகர்கள் கேட்டுக்கொண்டதற் கிணங்க வசதி செய்து தரவேண்டும் என்று வற்புறுத்துகையில்!

அரிசியியல் அல்லல்களைப் பற்றிப் பேசிடும் பொழுது ஆத்திரம் வரத்தான் செய்யும்—அது இயற்கை! தினசரியார், தீ நடையிலே அதனால் தான் தீட்டியிருக்கிறார் தலையங்கத்தை!

அந்நிய நாட்டிலிருந்து உதவியை எதிர்பார்ப்பதே தவறு — இனி நமக்கு வேண்டியவற்றை நாமே உற்பத்தி செய்துகொள்ள வேண்டும் என்று நேரு பேசிவிட்டார். அதை மனதில் எண்ணிக்கொண்டு முன்ஷி பர்மாவிலிருந்து அரிசி கொண்டுவரத் தங்களுக்கு ஏற்ற நாணய மாற்ற வசதி, போக்குவரத்து உதவி முதலியவற்றைச் செய்து தரவேண்டும் என்று கேட்ட வர்த்தகர்களிடம் தக்க முறையில் பேசாது, தட்டிக்கழித்திடும் போக்கிலேயே நடந்துகொண்டுள்ளார்.

ஆனால் அரிசியின்றி அல்லல் படுவதைக் காணும்போது தொல்லையின் எல்லை மீறுகிறது, இதய முள்ளவர்களுக்கு!

சென்னை இராஜ்யத்தின் உணவு நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதால் மத்திய சர்க்கார் அதிக உணவு தானியங்களை அனுப்பி உதவ வேண்டும் என்று க. நா. காங்கிரஸ் கமிட்டி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மத்திய சர்க்கார் போட்டுள்ள சிக்கனத் திட்டம் வேறு அரிசியியல், எவ்வளவு தூரம் அரசியலைப் பாதிக்கிறது என்று எடுத்துக் காட்டுகிறது! திருமணம், சாவுச் சடங்கு, மாநாடு போன்றவைகளுக்குப் போட்டிருக்கும் உணவு ஏற்பாடு, செல் விருந்தோம்பி, வருவிருந்து நோக்கியிருக்கும்—பகடு நடந்த கூழை பகுத்துண்ணும் பண்புடைய நம நாட்டவருக்கு எத்துணை வேதனை தரும்! நிலைமையைச் சமாளிக்கச் செய்கிறார்கள் இந்தச் சிக்கன ஏற்பாடுகளை—ஆனாலும் அரிசி வர வழியிருந்து, அதனை அடைத்துவிட்டு வேடிக்கை பார்ப்பது வேதனையாக இருக்கிறதல்லவா?

ஆஸ்டிரேலிய அரிசி சங்கம், ஆசியாவுக்கு அதிகம் தேவைப்படும் அரிசியை ஆஸ்டிரேலியா வட மேற்கு மாகாணங்களில் பயிரிட முடியும், இதற்குச் சிரமம் தேவையில்லை, அதிகப் பணமும் செலவிடப்படவேண்டியதில்லை, ஆட்கள் மட்டும் வேண்டும், இந்தியாவிலிருந்து வரவழைக்க ஆஸ்டிரேலிய குடியேற்றச் சட்டம் தடையாயிருப்பதால் இத்தாலியிலிருந்து தொழிலாளர்களை வரவழைத்துக் கொள்ளலாம், இரண்டு மாதங்களில் அரிசி விளைந்திடும் என்று கூறுகிறது. கேட்கும் பொழுதே நம் முகம் மகிழ்ச்சியால் மலர்கிறது. சர்க்காரின் போக்கினை எண்ணி விட்டாலே, கூம்பிய தாமரையாகி விடுகிறது, அடுத்த கணத்தில்!

சென்னை இராஜ்யத்தில் நெற்பயிரை அழிக்கும் "ஸ்டெம்போரர்" என்ற பூச்சிவகையை

(7-ம் பக்கம் பார்க்க)

நமது வெற்றி—ஒரு பாடம்

ஊழியரல்லவோ! ஊழியரல்லவோ!!
ஊராள வந்த நாம், ஊழியரல்லவோ!
மக்கள் கருத்துக்கு மதிப்பினை அளித்து—
மாண்புறு அறிஞர்தம் மனநிலை தேரிந்து,
மறவாப் புகழ்பெறு அதிகாரிகள் தம்
ஆசையும், வழியும் நன்ருய்ப்புரிந்து
ஆக்குவோம் சட்டம்; அதுவே நல் திட்டம்!

இதுபோலப் பாடவில்லை, அவர்! ஆனால் இதே கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார் ஒரு மந்திரியார்.

மந்திரியாரா?—இப்படிப் பேசியிருக்கிறாரா! என்று கேள்வியையும் ஆச்சரியத்தையும் அள்ளி வீசுவர், தோழர்கள். ஆமாம், மந்திரியார்தான் கூறுகிறார், 'மக்களுடைய ஊழியரல்லவோ நாங்கள்!' என்று.

காங்கிரஸ் மந்திரியாரா — சேச்சே! அவர்கள்தான் 'கனம்' ஆகியவர்களாச்சே, இதுபோல "இலேசாகப்" பேசமாட்டார்களே—இலேசுக்கும் கனத்துக்கும் ஏணி வைத்தாலும் எட்டாதே — என்று, எண்ணலாம் வாசக நண்பர்கள்.

வீம்பையே பெரிதென நினைத்து, வீதிகளிலெல்லாம்—முழக்கம் என்று எண்ணி கூச்சல் எழுப்பித்திரிந்த ஒரு குணவானே, இங்ஙனம் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார், வேதாளம் முருக்கமரமிருந்து இறங்கியது என்று சொல்வார்களே—அதுபோல.

"மந்திரிமார்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியர்கள். ஆகவே, முக்கிய பிரச்னைகளின் போது, மக்களில் விஷயமறிந்தோரின் கருத்து, நிபுணர்களின் அபிப்பிராயம், நிரந்தர அதிகாரிகளின் ஆலோசனை ஆகிய மூன்று வழிகாட்டிகளின் துணையோடுதான் நடக்க வேண்டும். அவைகளைக் கேட்காமல், காதுகளைக் மூடிக்கொள்வது, ஜனநாயகத்துக்கு முரணானது!"

பிரசங்கம் செய்வர்! பேசும்போது, கைதட்டியோரைப் பார்த்து சிரிப்பொன்றை வீசுவர்—சாதித்த செயல்கள் குறித்து சங்கநாதம் செய்வர் ஆனால் செய்த தவறுகள் குறித்து, எவரேனும் ஏதாகிலும், இலேசாகக் கூறினாலும் எக்காளமிடுவர்—இத்தகைய 'பெரிய மனுஷ' ரகத்திலே சேர்ந்தவர்தான், இப்போது இத்தகைய வாசகங்களை வெளியிட்டிருக்கிறார்.

கடந்த 18ந் தேதியன்று சிந்தாதிரிப் பேட்டையில் நடைபெற்ற தலைமையாசிரியர்கள் கூட்டத்தில் கல்வியமைச்சர் மாதவ மேனனார், இந்தி கட்டாயமில்லை என்று அறிவித்துப் பேசிய போதுதான், 'மக்களின் தொண்டரல்லவோ நாங்கள்' என்று, பழைய பல்லவியைப் பாடிக் காட்டியிருக்கிறார்!

அதே நேரத்தில் அவர், வாயினின்றும் வெளி வந்திருக்கும் வார்த்தைகளைக் கூர்ந்து கவனித்தால மனிதாபிமானம் படைத்தோருக்கு மாதவனாரின் நிலை குறித்து அனுதாபம் பிறக்கவே செய்யும்.

"தூற்றுகிறீர்கள் — என் செய்வேன்? எல்லாம் புரிந்து இங்கே வந்திருக்கிறோமாக்கும்! ஏதோ, தேர்ந்தெடுத்தீர்கள்—மந்திரிகளாக வந்துவிட்டோம். மந்திரிகளாக வந்துவிட்டால, ஏற்ற பணிக்கேற்ற வகையிலே ஏதோ 'காமா, சோமா' வென்றாவது காரியங்களை ஆற்றித்தானே தீரவேண்டும். இதையுணராமல்எங்கள்மீது சீறுகிறீர்களே!" என்று கூறுவதுபோல, கனம் மாதவ மேனன், "நான் மந்திரி தான்—ஆனால் நிபுணனல்ல!! என்று துயரத்தோடு வெளியிட்டிருக்கிறார்.

"மக்கு! பாடத்தைப் படியேண்டா-"

"எல்லாம் படித்துவிட்டேன் சார்!"

"இதுதான் இலட்சணமோ? சீதைக்கு ராமன் சிற்றப்பன் என்கிறாயே! மண்டு!!"

"படித்தேன் சார்-ஆனால மறந்துவிட்டது"

"மறந்துடுத்தோ? படிச்சா எப்படி மறக்கும்"

"நாலு தடவை படிச்சேன் சார், ஆனால் ஞாபகம் வரமாட்டேங்கிறது"

"மண்டாடா நீ-சொலலு, மக்குதானா? எது சொல்லிக் கொடுத்தாலும் ஏறாதா—மூளை காலியாய் போயிடுச்சோ? சொல்லித் தொலையேண்டா தொலைச்சு தலை முழுகிறேன்!"

பாடம் தெரியாத மாணவன், படித்தவன் போல நடிக்க, அதைக் கண்டு ஆசிரியர் மிரட்டி 'முட்டாளாடா நீ?' என்றுகேட்க, அந்த மாணவன், 'ஆமாம், சார் நான் மக்குதான்—எது சொன்னாலும் என் காதில் ஏறமாட்டேங்கிறது' என்ற பதில் சொன்னால். எப்படியிருக்கும். கோபத்துக்குப் பதில் அனுதாபம் உண்டாகுமல்லவா?

அதைப் போலத்தான், கல்வியமைச்சரின் 'நான் நிபுணனல்ல—மந்திரிதான்' என்ற வார்த்தைகளைக் கேட்கும்போது ஏற்படுகிறது.

மந்திரிகளாவோர்— எல்லாம் தெரிந்த சகல கலா பண்டிதர்களாகத் தானிருக்க வேண்டும் என்பதல்ல நமது கருத்தும்.

அமைச்சர் கூறுவது போல ஆட்சிபொறுப் பேற்றோர் அனைத்தையும் அறிந்து தானிருக்க வேண்டும் என்பதும்—இயலாத காரியம் தான்.

சுதந்திரம் பெறும் முயற்சியில் துடித்துக் கிடந்த, இவர்களுக்கு ஆட்சி சம்பந்தமான அனைத்தும் தெரிந்திருக்கவும் முடியாததுதான்.

இது தவறு என்று — எவரும் வாதாடமாட்டார். நாமும் கூறவில்லை!

ஆனால் இதுவரையில் எவரும் மாதவனாரைப் போல—இந்த உண்மையை வெளியிட்டது கிடையாது.

எல்லாம் தெரிந்தவர்களாக இருக்கவேண்டுமென்பதில்லை — ஆனால் அனைத்தும் அறிந்தவர் போல நடிப்பது இருக்கிறதே, அதுதான ஆபத்தாகும்!

ஆனால் ஆபத்துப்பாதையைத்தான்தொடர்ந்தனர் அமைச்சர்கள். அதுதான், 'மந்திரியாயிருப்பதற்கானு இலாயக்குபோதும்!' என்று எண்ணிக் கொண்டு!

இந்த எண்ணத்தின் விளைவாக — ஏற்பட்ட சங்கடங்கள் பலப்பல. "நான் மந்திரி! — எனக்கு இவர்கள் யோசனை கூறுகிறார்களாமே, யோசனை!" என்று வீம்பு பேசினர். "எல்லாம் தெரியும் எமக்கு — சுருட்டடா உன்வாதத்தை!" என்று மண்டையிலடித்தனர், யாராவது, ஏதாவதுகூற வந்தால்.

"எங்களுக்கெல்லாம் தெரியும்! தெரியாமலா வந்தோம் மந்திரியாக—பொறுப்பேற்றுவிட்டால் அதை நிறைவேற்றும் வகையும் வழியும் புரியும். போங்கள்!" என்று ஜம்பம் பேசினர்.

(6 ம் பக்கம் பார்க்க)

'காந்தியார் சாந்தியடைய!'

ஆறுமாதம் கடுங்காவல் — அபராதம் ரூபாய் ஐந்நூறு!

மூன்றுமாதம் கடுங்காவல்—அபராதம் ரூபாய் ஐந்நூறு!

அபராதத்தைக் கட்டத்தவறினால் மேலும் மூன்றுமாதம் சிறைவாசம்!

—'காந்தியார் சாந்தியடைய' என்னும் நூலைத் தீட்டிய விருதுநகர் தோழர் எ. வி. பி. ஆசைத் தம்பிக்கும் மேற்படி நூலையும், 'அழியட்டுமே திராவிடம்' என்னும் நூலையும் வெளியிட்ட துறையூர் தோழர்கள் தங்கவேல், கலியபெருமாள் ஆகியோருக்கும் முசிறி சப்-மாஜிஸ்டிரேட் அளித்த தீர்ப்பு இது.

இத்தீர்ப்பை எதிர்த்து திருச்சி செஷன்ஸ் கோர்ட்டில் அப்பீல் தொடுக்க, கழகத்தின் சார்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

தீர்ப்பின் விபரம் 'தந்தி' மூலம் சென்னையிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தலைமை நிலையத்துக்குக் கிடைத்ததும் பொதுச்செயலாளர் சி. என். அண்ணாதுரை மற்றத் தோழர்களுடன் கலந்து, அமைபபுக்குழுச் செயலாளர் தோழர் என். வி. நடராசனை, அப்பீல் செய்வது சம்பந்தமாகவும், தண்டனையடைந்த தோழர்களை ஜாமீனில் விடுதலை செய்விக்கவுமான காரியங்களைக்கவனித்து வருமாறு, திருச்சிக்கு அனுப்பிவைத்தார்.

ஜாமீனில் விடுதலையானதும், மேற்கொண்டு வழக்கை நடத்துவது சம்பந்தமாக விருதுநகர் கிளை தி. மு. கழகத்தினரைக் கலந்து பேசி ஆவன செய்து வருமாறும், பொதுச் செயலாளர், அமைப்புக்குழுச்செயலாளருக்கு அனுமதி அளித்தார்.

அதையொட்டி உடனடியாகத் தோழர் என். வி. என். 20-ந் தேதி யன்று திருச்சி சென்றார். திருச்சி தி. மு. க. தோழர்களான அம்பில் தர்மலிங்கம், சாம்பு, வானமாமலை, துறையூர் அழகமுத்து ஆகியோர், ஜாமீன் விடுதலைக்கான ஏற்பாடுகளைச் செய்துவருவதை அறிந்து, தோழர் என் .வி என். உடன் இருந்து, ஒத்துழைத்தார்.

21-ந்தேதி மாலை, தண்டனையடைந்த தோழர்களை ஜாமீனில விடுமாறு திருச்சி செஷன்ஸ் நீதிபதி உத்தரவு பிறப்பித்ததோடு, ஆகஸ்ட்டு 4-ந்தேதியன்று அப்பீல் வழக்கு விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்படுமென்றும் அறிவித்தார்.

பின்னர், திருச்சி மத்திய சிறைக்குச் சென்று தோழர்கள் ஆசைத்தம்பி, தங்கவேல், கலியபெருமாள் ஆகியோரைத் திருச்சி, துறையூர் கழக நண்பர்களும், தோழர் என். வி. என்னும் சந்தித்து, பொதுச் செயலாளர் தந்த செய்திகளைக் கூறினர்.

அன்று இரவே தோழர் நடராசன். விருதுநகர் புறப்பட்டுச் சென்று மறுநாள் விருதை திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களைச் சந்தித்து விபரம் கூறியதன் பேரில், அன்றுமாலை 4மணிக்கு கிளைக் கழக நிர்வாகக் கமிட்டிக் கூட்டம், தோழர் என். வி. என். தலைமையில் நடைபெற்றது.

அதுபோது, பொதுச் செயலாளர் அறிவிப்பையும், இதுபோன்ற வழக்குகள் குறித்துத் தலைமைச் செயற்குழு செய்திருக்கும் தீர்மானத்தையும் எடுத்துக் காட்டி, கிளைக் கழகத்தினர், வழக்குக்குறித்து, ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

இத் தகவலை, விருதை தி. மு. கழகத்தினர், மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டதோடு—வழக்கை நடத்துவதற்கான நிதியைத் திரட்டுவதற்காக ஐந்து பேர் கொண்ட நிதி வசூல் கமிட்டியொன்றையும் நிறுவினர். மேற்படி கமிட்டிக்குப் பொருளாளராக இருந்து பணியாற்றத் தோழர் அய்யாச்சாமியும், செயலாளராக இருந்து ஆவன செய்யத் தோழர் இளஞ்செழியனும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

மேற்படி வழக்கு நிதிக்கெனப் பொதுச் செயலாளர் சி. என். அண்ணாதுரை அளித்த ரூபாய் 50, முதன் முதலாகப் பதிவு செய்யப்பட்டது.

பின்னர், ஆசைத்தம்பியின் தந்தையாரையும் மற்ற முக்கிய தோழர்களையும் சந்தித்துவிட்டு, தகவலைப் பொதுச் செயலாளரிடம் அறிவிப்பதற்காகத் தோழர் என். வி. என். நேரகச் சென்னை திரும்பினர்.

அப்பீல் வழக்குச் சம்பந்தமாக உடனிருந்து கவனித்துக் கொள்வதாக திருச்சி மாவட்டத் தோழர்களும், மேற்படி மாவட்ட தி. மு. க. துணைச் செயலாளர் தோழர். பராங்குசமும் அறிவித்துள்ளனர்.

23-ந்தேதி ஞாயறு விடுமுறையாதலால் திங்களன்று தோழர் ஆசைத்தம்பியும், மற்ற இரு தோழர்களும் சிறைச்சாலையிலிருந்து விடுவிக்கப் பட்டனர்.

உரிமைப் போரின் துவக்க அத்தியாயம் ஆரம்பமாகியிருக்கிறது. கஷ்ட நஷ்டங்களைத் துச்சமென மதிக்கும் திறம் படைத்த காளைகள்தான் நாம்! எனினும் 'நீதி' கோரி—நிற்கிறோம்! அதற்கான நடவடிக்கைகளைச் செய்வதெனத் திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பில் முடிவுசெய்யப் பட்டிருக்கிறது.

தலைமைக் காரியாலயத்தின் விருப்பையறிந்து மன மகிழ்வுடன் பொறுப்பையேற்றுக்கொண்ட விருதைக் கிளைக் கழகத்தினரின் ஆர்வத்தைப் பாராட்டுகிறோம். வெற்றி பெறுவதற்கான, ஏற்பாடுகளை விரைவில் முடிக்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

காந்தியாரின் பாதையில் நடப்பதாகக் கர்ஜனை யெழுப்பும் கனவான்கள் ஆட்சியில் — நம்மீது வீசப்பட்டிருக்கும் அம்பு, இது. சாதாரணமானதல்ல—கூட்டைத் திறந்துவிட்டு 'சிங்கமே, வெளியில் வா!' என்று வேண்டுமென்றே, வீண்வம்புக்கிழுப்பது. ஆகவே, நாம், 'நீதி'யின் முன் செல்கிறோம்—நேர்மையைத் துணையாகக் கொண்டு.

உரிமைப்போரின் முதல் அத்தியாயம் ஆரம்பமாகிறது — அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய, இயன்றளவு, பொருளுதவி செய்யுமாறு—பொதுவாக வசதிபடைத்தோரையும், குறிப்பாக விருதுநகர் தோழர்களையும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

திராவிடநாடு

ஞாயிறு] 30 7—50 [காஞ்சி

ஆளவந்தாருக்கு
வேண்டுகோள்

✲

வெற்றி பெற்றுவிட்டோம்! தாய் தவிக்க, தாசிக்குச் சுகவாழ்வா? என்று ஆத்திரத்துடன் நாம் எழுப்பிய வீரக்குரல், இன்று வெற்றிக் களிப்பை நமக்குத் தந்துவிட்டது.

தாய்மொழி சிதைய தமிழன் ஒருநாளும் தாளான்—என்ற பரம்பரைப் பெருமையை நிலை நாட்டிவிட்டோம் கண்மூடிகள்போல் நடித்தோரும், 'காண்பீர், இந்த கையாலாகாததுகளின் முடிவை' என்று கிண்டல்செய்தோரும், 'இந்திக்கு இடம் தந்தால் இதுகளுக்கு என்னவாம்?' என்று ஏளனத்தொனியில் பேசியோரும், இன்று, நமது வெற்றியைக் காணுகின்றனர்.

மொழிப்போர் வெற்றிநமதுமூலவெற்றிக்கான அடிப்பீடம். நேர்மையும், நீதியும், நிச்சயம்வெற்றி பெறும் என்பதை உலகுக்கு உணர்த்தும் நற் சான்று. நெஞ்சில் வஞ்சமில்லாதோர், நாட்டுக்கு நற்பணியாற்றும் நல்லோர் என்ற பாராட்டுகளை நமக்கு நாட்டினரிடமிருந்து பெற்றுத்தந்து விட்டது மொழிப்போர்.

மொழிப்போரில் நாம் பெற்ற வெற்றிகண்டு மக்களிடை மலர்ந்திருக்கும் மகிழ்ச்சியை நமக்கு வந்து குவியும் பாராட்டுச் செய்திகள் கூறுகின்றன. பேராசிரியர்கள், தமிழ்ப்புலவர்கள், மாணவமணிகள், எல்லாம் கீதம்பாடுகின்றனர்! துடித்துத் தவித்தோர் இதயங்கள் இன்றுபூரிப்புத்துளிர்க்க, மகிழ்ச்சியில் திளைத்துக்கிடக்கின்றன!

மூன்று ஆண்டுகளுக்குமுன் இந்தி கட்டாய பாடம்தான் என்று கர்ஜனை எழுப்பி நாட்டுஇளம் சிறார்களிடை "வலுவில்" புகுத்திய காட்சி இன்று மறைந்துவிட்டது, கட்டாயப்படுத்திய அவர்களே இந்தி விருப்பபாடம்தான் என்று சட்டம் செய்து இருக்கின்றனர். அன்று, ஆணவக் கொக்கரிப்பு! இன்று, விஷயமறிந்ததால் ஏற்பட்ட விவேகமுடிவு!

இம்முடிவுக்கு வந்த ஆளவந்தாரை, தமிழகம் பாராட்டாமலிராது. சூழ்நிலை உணர்ந்து, திராவிடமக்களின் மொழிக்காதல் தெரிந்து, "உயிர் கொடுத்தும் மொழி காப்போம்" என்ற வீரப்பண்ணை அறிந்து, வீம்புக்கு இரையாகாமல் விவேகத்தைத் துணைக்கழைத்து இப்போதாவது இம்முடிவுக்கு வந்தனரே என்று எண்ணும்போது —இந்த மந்திரிமார்களை வாழ்த்தத்தான் செய்வார் பொறுப்புணர்ந்தோர்.

தமிழ்நாடு இந்திப்போரால்இரத்தத்தடாகம் ஆகிவிடுமோ—என்ற அச்சத்தோடு, 'ஏன் வீண் தொல்லை" என்ற எண்ணததால், வீரமுழக்கமும் வெற்றிக் கர்ஜனையும் அன்று எழுப்பிய சர்க்கார், மக்களின் கோரிக்கைக்குஇன்று தலை சாய்த்துவிட்டது. மதிப்பளித்து, இந்தி கட்டாயமில்லை — இஷ்டமிருந்தால் எடுத்துப் படிக்கலாம் என்று புதுஉத்தரவு பிறப்பித்துவிட்டது.

விவேகம் நிரம்பிய இம்முடிவால், தமிழுக்குத் தாங்கள் செய்த துரோகத்திற்குக் கழுவாய் தேடிக்கொண்டு விட்டனர்-சர்க்கார்! தாயைத் தூரத்தியடிக்கும் தருக்குமிக்கோர் என்ற இழி சொல்லிலிருந்தும், தங்களைக் காத்துக்கொண்டு விட்டனர், மந்திரிமார்கள்.

புனிதப்போர்—வெற்றியைத் தந்துவிட்டது நமக்கு. விவேக நிலையைச் சிருஷ்டித்திருக்கிறது காங்கிரஸ் வட்டாரத்தில்.

மலர்ந்துள்ள இந்தப் புதுநிலை-மகத்தானது. வேற்றுமொழி ஆதிபத்யம், எந்த உருவில் ஏற்படினும், அதை எதிர்த்துப் புறங்காட்டியோடச் செய்வர் தமிழகத்தார் என்ற பெருமையை உலகுக்கு உணர்த்திவிட்டது.

வெற்றிக்களிப்பில் விளையாடும் நாம்—இந்தி ஆதிபத்யம் எத்தகைய பிடிக்குள் 'இங்குள்ளவர்களை' வைத்திருக்கிறது என்பதை மறந்துவிடவில்லை. நம்மைப்போலவே இங்குள்ளோரும் உணர்ந்து வருகிறார்கள் என்பதைத் தெரிவிப்பது தான், திமிர்வாதம் பேசி இன்று திடீர்முடிவுக்கு வந்த ஆளவந்தாரின் நடவடிக்கை உணர்த்துவது.

ஆகவே, உதயமாகியுள்ள இந்த உவகை நேரத்தில் ஊராள்வோருக்கு நமது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறோம். 'உண்மை என்றும் வெல்லும்! நேர்மை எப்போதும் நிற்கும்!' என்பதை, இப்போதாவது அறிந்து கொள்ளுங்கள் என்று, அறிவித்துக் கொள்ளுகிறோம்—அன்போடு.

தாயைத் தாழ்த்தி, தகாதவளைத் தளிர்க்கொடியென்று நினைத்து மஞ்சத்திலமர்த்தி, தங்களைச் சார்ந்தோரை வஞ்சிக்காதீர்—கிஞ்சித்தும் இனி உங்கள் இதயங்களில் எழும்பவேண்டாம் அந்தநினைப்பு என்று தெரிவித்துக்கொள்கிறோம்.

ஊராண்டது, பாராண்டது, உலகு போற்றுவது நமதருந் தமிழ் மொழி! தித்திக்கும் தேன், தெவிட்டாத தெள்ளமுது, எத்திக்கும் புகழ்மணக்கும் இன் மொழி நமது! இதை — தாழ்த்த நினைக்காதீர். தாழ்த்துவதைக் கண்டு சகிக்காதீர். தேசியம்பேசி, கழித்த காலம்போதும். மயக்கும் அந்த மதுவினை மாந்தி, மாதாவை மண்ணுக்குள் புதைக்கும் மாப்பழிக்கு ஆளாவது—வீணர்கள் செயல். வேண்டாம், அது நமக்கு.

தரணியாண்ட நம் தமிழ் இன்று, தருக்கரால் வேண்டுமென்றே உதாசீனம் செய்யப்படுகிறது—வெறுக்கப்படுகிறது. நெஞ்சிலே கைவைத்தால், நீங்களும் உணரலாம்—நினைவைத் தடுமாறவிடாவிடில உங்கள் இதயமும் துடிக்கும்.

மகுடம் சூட்ட முனைந்தீர்கள் இந்திக்கு-கட்டாயபாடம் என்ற கனகச்சேலை போர்த்தி. ஆனால், மகுடம் சாய்ந்து விட்டது—எண்ணம் வெற்றி பெறவில்லை

காரணம், தேசிய போதையால் தாய்மொழியைத் தள்ளிய உங்களைத் தமிழர்களின் வீரகீதம் விவேகபுரிக்கு அழைத்து வந்திருக்கிறது. 'வீரா, சோராதே— சொகுசுப் பேச்சில் மயங்காதே!' என்று எச்சரிக்கை தந்திருக்கிறது. வீழ்ந்தது போதும், விழி! எழு! என்ற வீரப்பாதையைக் காட்டி யிருக்கிறது.

இந்த நேரம் தமிழகம் பூரிக்கும் நேரம். புளகாங்கிதம் அடைந்திருக்கும் வேளை. இதயம் குளிர்ந்திருக்கும் இன்ப நேரத்தில் இன்னொரு வேண்டுகோளையும் தெரிவித்துக் கொள்கிறோம்—ஆளவந்தார்களாக நீங்கள் இருப்பதால்.

தமிழுக்கு வந்த ஆபத்து முறியடிக்கப்பட்டு விட்டது ஆனல் தமிழைத் தாழ்த்த நினைக்கும் தகாத நினைப்பும், செயல முறைகளும் இன்னும் பட்டுப் போகவில்லை.!

மானங்கெட்டாய், மதிப்பிழந்தாய்--இன்னும் சின்னாளில் மரணத்தின் வாயிலிலே தான் நிற்பாய் என்று இதயத்திலே ஈட்டிகளை வீசுவது போல, ரயில்வே நிலையங்களின் 'போர்டு'கள் காட்சி தந்து கொண்டிருக்கின்றன.

நிலையங்களிலே, அந்தந்த ஊர்களின் பெயர்கள் பொறிக்கப பட்டிருக்கும் முறையைக் காண்போரின் இதயம் தீப்பொறிகளைச் சிந்தவே செய்யும்.

தலைப்பில் இந்தி.
அடுத்தபடி ஆங்கிலம்.
கடைசியில் தமிழ்.

பெயர்கள் எழுதப்பட்டிருக்கும் முறை இது. வடநாட்டு மொழிக்கு, மகுடம்! நம்மை வாழ்விக்கும் மொழிக்குக் கடைசி இடம்! தாசிக்கு அரியணை—தாய்க்குத் தரை!!

நெஞ்சிலே ஈட்டி, நினைவிலே வேல், உடலிலே அம்புகள் ஆயிரக் கணக்கில் பாய்ச்சப்படுவது போன்ற, கோரக் காட்சி! சகிக்க முடியாத, இக்காட்சி, தமிழர்களின் உள்ளங்களைக் கொதிக்க வைக்கும். சாதாரணமான விஷயம் — பிரயாணிகளின் நலத்துக்காகப் பொறிக்கப்படும் பெயர். இதிலே வேற்றுமை! ஆதிபத்யப் போக்கு!!

"சிறு விஷயம்—இதற்கேன் இவ்வளவு சிந்தை கலங்க வேண்டும். பெயர் எம்முறையில் எழுதப்பட்டிருந்தால் என்ன? ஏதோ, போய் வருபவர்களுக்குப் புரியவேண்டும் என்பதுதானே" என்று, நமது குற்றச்சாட்டுக்குப் பதில் கூற விரும்பலாம்—ஆளவந்தாரைச் சேர்ந்தவர்கள்.

சில்லரை விஷயம்தான்—ஆனல் இதில் எவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கின்றனர் மத்திய சர்க்கார்.

சாதாரணமானதுதான் — ஆனல் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதற்குள்ள காரணம் என்ன—உள் எண்ணம் யாது?

"வடநாட்டிலிருந்து தென்னடு வருவோருக்கு ஸ்டேஷன்கள் பெயர் தெரியவேண்டாமோ?" என்று கேட்க நினைக்கலாம்—தினசரி பிரயாணம் செய்யும் ஆயிரக்கணக்கான மக்களில் வடநாட்டு யாத்திரீகர்கள் ஓரிருவர் தானே இருப்பர்.

அந்த ஓரிருவர் தவிர்த்து பிரயாணஞ் செய்யும் ஏனையோரெல்லாம் திராவிட மக்கள் தானே—இருந்தும் ஏனிந்த ஏற்பாடு? கேட்கத்தான் தோன்றும் ரயில்வே போர்டுகளைக் காணுந்தோறும் மனங் கொதிக்கும் தோழர்களுக்கு.

ஆங்கில மொழியிலும் ஊர்களின் பெயர் பொறிக்கப்பட்டிருக்கின்றன. வடநாட்டைச் சேர்ந்த இந்திமொழி கற்ருேர் மட்டுமல்ல, ஏனைய மொழிகளைத் தாய் மொழியாகக் கொண்டோரும், ஆங்கிலத்தால்—ஊர்களின் பெயர்களைத் தெரிந்து கொள்ள முடியும். இருந்தும், இந்தியில் பெயர்கள்—அதுவும் தமிழ் அடியில் கிடக்க, தலைக்கு மேலே இந்திக்கு இடம்!

வேண்டாத காரியம் இது—எனினும் மத்திய சர்க்காரின் ஆதிக்கத்திலிருக்கும் ரயில்வே இலாகாவால் விரும்பிச் செய்யப்பட்டிருக்கிறது. இந்த விருப்பத்துக்குக் காரணம்—மொழி ஆதிபத்ய உணர்ச்சியே தவிர, வேறு எதையும் காரணமாகக் கூறமுடியாது!

ரயிலில் பிரயாணம் செய்யும் மக்கள் பெரும் பாலோர் இந்தி தெரியாதவர்கள்!

தினசரி சென்று வருபவர்களுக்குத் தமிழில் இருந்தாலே போதும்—ஊர்ப்பெயர்களை எளிதில் தெரிந்துகொள்வார்கள்!

வெளியிலிருந்து வருபவர் வசதிக்கு ஆங்கிலம் மட்டும் இருந்தாலே போதும்!

ஆனல் ஆளவந்தாரோ,

இந்தியில்
ஆங்கிலத்தில்
தமிழில்

என்று, முறை வகுத்து, பெயர்களைப் பொறித்திருக்கின்றனர். இந்தச் சில்லரை விஷயத்தில், செலுத்தப்பட்டிருக்கும் சிரத்தையையும் கவனத்தையும் கவனிக்கும்போது, தமிழ் குறித்து எவ்வளவு ஏளனம் "அவர்கள்" இதயங்களிலே துள்ளி விளையாடுகிறது — என்பது விளங்கும்! ஆதிபத்ய நோக்கத்தோடு, அலட்சியத்தைத் துணைக்கழைத்து, தாழ்த்தி நடத்தும் திமிர் வாதம் சதிராடுகிறது என்பது விளங்கும்!

ஏளனம், இழிவு படுத்தும் போக்கு—இவைகளைக் கண்டு சகிக்க முடியாதவர்கள் தமிழர்கள்!

இதை, இந்த இன்ப நேரத்தில், இங்குள்ள ஆளவந்தாருக்கு எடுத்துக் காட்டுகிறோம்—விரைவில் ரயில்வே நிலையங்களின் போர்டுகள், தலைப்பில் தாய்மொழியைத்தாங்கி மாற்றப்படுவதற்கான வழிவகைகளைச் செய்யுங்கள் என்ற கோரிக்கையோடு.

(அடுத்த பக்கத்தில்)

தோழர் ஆசைத்தம்பி வழக்கு அப்பீல்
உதவிநிதி வேண்டுகோள்

விருதை தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி மீது அரசியலார் தொடுத்த வழக்கில் முசிறி நீதி மன்றத்தில் ஆறுமாத கடுங்காவலும் ரூ 500 அபராதமும் விதிக்கப்பட்டதை நேயர்கள் அறிவார்கள்.

தலைமை நிலையத்தின் ஆலோசனைப்படி விருதுநகர் கிளைக் கழகத்தின் சார்பாக உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்து கொள்வதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அப்பீலுக்கான நிதி திரட்டுவதற்கும் ஓர் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

அப்பீலின் நோக்கம் தோழர் ஆசைத்தம்பியை சிறைத் தண்டனையிலிருந்து மீட்பதற்காகவல்ல. அரசியலாரின் நியாயமற்ற அடக்கு முறையை உயர் நீதி மன்றங்களில் எடுத்துக்கூறி நமக்குரிய பேச்சுரிமை, எழுத்துரிமையை நிலைநிறுத்துவதற்கே ஆகும்.

ஆகையால் திராவிட பெருங்குடி மக்கள்:—

K. S. S. அய்யாசாமி
எவரெஸ்ட் சுருட்டுத் தொழிற்சாலை,
விருதுநகர்.

என்ற முகவரிக்குப் பணம் அனுப்பி உதவி செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன். நமது பொதுச் செயலாளர் சி. என். அண்ணாதுரை அவர்கள் ரூ 50 அன்பளிப்பாய் அளித்திருக்கிறார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மு. இளஞ்செழியன்
செயலாளர், தி. மு. கழகம், விருதுநகர்.

வந்தது விபத்து—வழி தேடுங்கள்

ஆதிக்கம் நீடிப்பதை அனுமதிப்பதா?

உழைப்போன் தேய 'ஒரு சாராரே' வாழ்வதா?

அணையை உடைக்காதீர்; வெள்ளம் கரை புரளும்!

வகுப்பு நீதி தீர்ப்பு: சி. என். ஏ. வேண்டுகோள்

திராவிடருக்கு மகத்தானதோர் சோதனைக் காலம் பிறந்துவிட்டது.

திராவிடச் சமுதாயத்துக்கு, அதன் ஆதிநாள் தலைவர்கள் அரும்பாடுபட்டு பெற்றுத் தந்த கருவூலம் பறிபோய்விட்டது.

பன்னெடும் நூற்றாண்டுகளுக்கு முன்பு புகுத்தப்பட்டுவிட்ட மனுவின் சமூகச் சட்டத்தின் பலனாக, திராவிடச் சமுதாயம், தாழ்நிலை அடைந்து, சகல துறைகளிலும், ஆதிக்கக்காரரின் ஏவலராகி, கையில் ஊமைபோலாகிக் கிடந்தது கண்டு, நாடாண்ட மக்கள், கடலை அடக்கிய மக்கள், முத்தமிழ் வளர்த்த மக்கள், வீரபுரியில் வாழ்ந்த மக்கள், வினையின் விபரீதச் சூழ்ச்சியில் சிக்கி, ஜாதிமுறை எனும் படுகுழியில் தள்ளப்பட்டது காரணமாக, தன்னம்பிக்கை கெட்டு, தன்மானம் பறிக்கப்பட்டு, அறிவுக் கண்ணை இழந்து கிடப்பது கண்டு மனம் கலங்கி, மாபெரும் தலைவர்கள், சிந்தித்துச் சிந்தித்து, வீழ்ச்சியுற்ற சமூகத்தை எழுச்சிபெறச் செய்யும் அரியதோர் திட்டத்தைத் தீட்டினர்—நாட்டிலே நடைமுறையிலே அது கொண்டு வரப்பட்டு, கோரிய பலனைக் கொடுத்தவண்ணம் இருந்தது. அந்தத் திட்டம் தகர்க்கப்பட்டுவிட்டது.

கம்யூனல் ஜி. ஓ. — வகுப்புவாரி முறை புதிய இந்திய அரசியல் சட்டப்படி செல்லுபடியாகாது என்று இரு மாணவர் சார்பாக, அரசியல் சட்டத்தைத் தீட்டியவர்களில் முன்னணியினராக இருந்த அல்லாடி கிருஷ்ணசாமி ஐயரும், வி. வி. சீனுவாச ஐயங்கார் எனும் வக்கீலும் நடத்திய வழக்கிலே, சென்னை உயர்நீதி மன்றத்து நீதிபதிகள், தீர்ப்பளித்துவிட்டனர்.

கம்யூனல் ஜி. ஓ—சென்னை மாகாணத்துச் சமூக அமைப்பைக் கவனித்து அங்கு சமூகநீதி வழங்கப்படுவதற்காக வகுக்கப்பட்ட சட்டம்.

புதிய இந்திய அரசியல் திட்டம், வெள்ளையன் வெளியேறினதால் ஆட்சிப்பீடத்தமர்ந்த காங்கிரஸ் சர்வாதிகாரிகள் தீட்டிய சட்டம்—டெல்லியில்.

அந்த டெல்லி சட்டத்தின்படி. சென்னை சர்க்காரின் திட்டம், சட்ட விரோதமானது, என்று தீர்மானிக்கப்பட்டுவிட்டது.

நீதிபதிகள் மூவர்—முதல்வர், ராஜமன்னார்—மற்றவர், விசுவநாத சாஸ்திரியார், சோமசுந்தரம் ஆகியோராவர்.

இந்த மூவர் அளித்த தீர்ப்பு, சட்ட சம்பந்தமானது.

அவர்களின் பொறுப்பும், கடமையும் அது. அது குறித்து, நாம் ஏதும் கூறுவது கூடாது—தேவையுமில்லை.

எட்டும் எட்டும் பத்து என்ற கணக்கு முறையை ஏற்றுக்கொண்டுதான் தீரவேண்டும் என்றால், நாலும் நாலும் எட்டு என்ற உண்மையை நிலைநாட்ட முடியாது.

ரூபாய்க்கு 12 அணாதான் என்பதை ஏற்றுக்கொண்டுவிட்டால், அரை ரூபாய்க்கு ஆறணாதான் பெற்றுக்கொண்டாகவேண்டும்.

அதன்படி, இந்தியாவை ஒரே நாடு என்று கருதி, அதிகாரத்தை மத்திய சர்க்காரில் குவித்து வைத்துக்கொண்டு, மாகாண சர்க்கார்களைச் சாதாரண பஞ்சாயத்து போர்டு நிலைமைக்குக் கொண்டுவந்தான பிறகு, சென்னை சர்க்காரின் கம்யூனல் ஜி. ஓவை, சட்ட விரோதம் என்று சொல்லும் அதிகாரம், சட்டப்படி ஏற்பட்டுவிட்டது.

இந்தப் புதிய சட்டத்தின்படிதான், பாடுபட்டுப் பெற்ற, பலன்தரும் கம்யூனல் ஜி.ஓ.—கல்லறைக்கு இழுத்துச் செல்லப்படுகிறது.

கண்ணீர் ஆறு ஓடுகிறது நாட்டிலே—ஆனால் சட்டம் பேசுகிறது—கண்டிப்புடன்.

டில்லி, சென்னையை இப்படித்தான் ஆட்டி வைக்கும் என்று சொன்னபோது, கண் சிமிட்டி உதட்டை அசைத்தவர்களின் முகத்திலெல்லாம் அசடு வழியும்படியாகத் தீர்ப்பு கிடைத்துவிட்டது.

பார்ப்பனச் சமுதாயத்திலே, வகுப்பு ஆதிக்க வெறிக்குணம் கொண்டவர்களின் பிடிவாதம், வெற்றிபெற்றுவிட்டது. பிராமண மாநாடுகளின் தீர்மானப்படி, நிலைமை இன்று, வகுப்பு ஆதிக்கக்காரர் கொட்டமடிக்கும்படி ஆகிவிட்டது. இந்துவும், மித்திரனும், தினமணியும் மற்றும் பல வகுப்புவாத இதழ்களும், பல ஆண்டுகளாகச் செய்துவந்த முயற்சி, முடிவடைந்து, வகுப்பு நீதிக்காகப் போராடி, வாதாடியவர்களின் மூக்கு அறுபட்டுவிட்டது.

எதிர்காலம்—பயங்கரமானதாகிவிட்டது.

இடருள்ள வழி—இருட்டு நேரம்—விளக்கு அணைந்துவிட்டது — இதுவே இன்று ஏற்பட்டுள்ள நிலைமை.

சென்னை சர்க்காருக்குத் தோல்வி — திராவிடச் சமுதாயத்துக்கு மானக்கேடான தோல்வி — பார்ப்பனரை தூற்றாதே, என்று சமரசம் பேசிய சற்குணவான்களுக்கு, வெட்கம்.

......—அன்று, தியாகரின் கல்லறைமீது' கேலியும் கண்டனமும் சென்று தாக்கிவிட்டன.

பட்டபாடு வீணாகிவிட்டது — கட்டிய கோட்டை இடிக்கப்பட்டு விட்டது — இனி 'திறமை' என்ற பெயர் கூறிக்கொண்டு, ஆதிக்க வகுப்பினர், தமது பிடியைப் பலப்படுத்திக் கொள்வர்.

வெள்ளுடை வேந்தன் வீரத் தியாகராயர், திராவிடச் சமுதாயத்துக்காகத் துவக்கிய சம உரிமைப் போரிலே, பல வெற்றிகளைக் கண்ட சமுதாயம், இன்று, இரத்தக் கண்ணீர் விடக்கூடிய விதமான வேதனைதரும் தோல்வியைக் கண்டுவிட்டது.

சட்டம், திட்டமாகக் கூறுகிறது, 'ஜாதி' காரணமாக, யாரையும், கல்வித் துறையிலே அனுமதிக்க மறுக்கக் கூடாது என்று.

இது பரந்த நோக்கமாம்—ஜனநாயகப் பண்பாம் — புதிய இந்தியாவின் இலட்சணமாம்—இராமராஜ்யக் கோட்பாடாம்!

இதன் விளைவு என்ன ஆகும் என்று எண்ணும் போதே நேர்மையாளர்களின் நெஞ்சம் நடுக்கமெடுக்கிறது.

கம்யூனல் ஜி. ஓ—ரத்தாகி விட்டது—இனி, பார்ப்பன மாணவர் இவ்வளவு எண்ணிக்கைதான் கல்லூரிகளில் சேர்க்கப்படுவர், என்றமுறை இராது, 'மார்க்கு' எனும் தகுதியைக் கவனித்து யாரும் சேர்த்துக் கொள்ளப்படுவராம்.

இதன்படி, கல்வி நிலயங்களிலே, ஒரே வகுப்பு — பார்ப்பன வகுப்பு நிரம்பிவிடும்—மற்ற வகுப்பார், ஜாதீயமுறையினால் பின்னணிக்குத் தள்ளப்பட்ட வகுப்பினர் 'மார்க்' அந்த அளவுக்குப் பெறவில்லை என்ற காரணத்துக்காக, கல்லூரியில் இடம் கிடைக்காமல், வெளியே வாட வேண்டும்.

"அவர்களுக்கு என்ன ஐயா, குறை! கம்யூனல் ஜீ. ஓ—இருக்கவே இருக்கிறது, கைதூக்கி விட!"—என்று பொறாமையுடன் பொச்சரிப்புடன் பேசிவந்தவர்களின் அகமும் முகமும் அன்றலர்ந்த செந்தாமரையாகி விட்டது, விழா நாள், வகுப்பு ஆதிக்கக்காரருக்கு — வேதனை தரும் நாள், திராவிடப் பெருங்குடி மக்களுக்கு.

"பையன், என்ன செய்கிறான்?" — நண்பர் கேட்கிறார் — "B. A. வகுப்பில் சேர்ந்திருக்கிறான்" தகப்பனார் கூறுகிறார் பூரிப்புடன். அவருடைய குடும்பத்திலேயே முதல் B. A. அரும்புகிறது—இது கம்யூனல் ஜீ. ஓ—வின் பலன்.

இனி, 'என்ன செய்கிறான்?' என்ற கேள்விக்கு, டிராம் ஓட்டுகிறான், துறைமுகத்தில் 'மேஸ்திரி'யாக வேலை பார்க்கிறான், கல்லூரியில் சேரவில்லை—இவனைவிட அதிக மார்க்கு வாங்கிவிட்ட 'பிராமணப்பையன்' சேர்ந்து விட்டான்—என்று தகப்பனார் கூறுவார்.

அடுத்த ஆண்டு பள்ளிகள் துவக்கத்தின் போது, திராவிடக் குடும்பங்களிலே, ஏற்பட இருக்கும் திகைப்பை முன்கூட்டி எண்ணினாலே, நெஞ்சு 'பகீர்' என்கிறது.

வந்தது விபத்து! அழிந்தது சமூக நீதி.

மிகமிகச் சிறுபான்மையினரான பார்ப்பனர்களைப்பற்றி வீணாகப் பிரமாதப்படுத்திப் பேசுகிறாயே, பேயனே! பித்தனே!—என்று நம்மைக் கேலி பேசி, 153-ம் செக்ஷன் கொண்டு தாக்கி, 'தேசபக்தர்' 'இந்தியர்'—என்ற பட்டப் பெயரைச் சூட்டிக்கொண்டுள்ளவர்களைக் கேட்கிறோம்—பார்த்தீரா! மாகாணத்திலே முப்பது ஆண்டுகளாக இருந்து வரும் முறை—பலப் பல மந்திரிகளால் ஆதரிக்கப்பட்ட முறை-காங்கிரஸ் மந்திரிகளாலும் ஆதரிக்கப்பட்ட முறை—சட்டசபையிலே வெற்றிக்கொடி காட்டிய முறை—இதோ அந்தச் சிறு வகுப்பினரிலே உள்ள சூழ்ச்சிகலக்காரரின் வேலையினால், வீழ்ந்துவிட்டது! இப்போது என்ன சொல்கிறீர்கள், சமரசவாதிகள்—எண்ணிக்கையை மட்டும் எண்ணிக் கொண்டு, யார் நம்மை என்ன செய்யமுடியும் என்று இறுமாந்து கிடந்த ஏமாளிகள்! இதோ, கம்யூனல் ஜி. ஓ. சட்டவிரோதம் என்று தீர்ப்பாகிவிட்டது.

பின்னணியில் இருக்கிறது—சூழ்நிலை கெட்டுக் கிடக்கிறது—ஆகவேதான், அந்தச் சமூகத்துக்குச் சில சலுகைகள் காட்டுவது நியாயம், என்று பேசினர் அமைச்சர்கள் — சட்டமோ, அதெல்லாம் எனக்குத் தெரியாது, கம்யூனல் ஜி. ஓ—சட்டவிரோதம் என்று கூறிவிட்டது.

சட்டப்படி செய்யக்கூடியதை, செய்ய வேண்டியதைச் செய்துவிட்டனர் நீதிபதிகள்.

இதன் பயனாக—இந்தத் தீர்ப்பைச் சாதகமாகக் கொண்டு, வகுப்பு ஆதிக்கக்காரர்கள், சமூக நீதியை அழித்து, சிறுபான்மையினரின் சர்வ ஆதிபத்யத்தை நிலைநாட்டப் போகிறார்கள். பழைய நிலை—ஜஸ்டிஸ் கட்சி ஏற்படாதபோது இருந்த நிலை—பார்ப்பன ஆதிக்கம் — இதோ வந்து கொண்டிருக்கிறது.

இந்நாட்டிலே உள்ளதுபோன்ற கொடுமையான சமூக அமைப்பு வேறு எங்கும் கிடையாது.

இங்கு 'ஜாதிமுறை' மக்களைச் சின்னாபின்னமாக்கி, சிறுபான்மையினரை, ஆதிக்கக்காரர் ஆக்கி விட்டது.

மேனாடுகளிலே ஒரு சிறுபான்மைக் கட்சி, பலாத்காரத்தின்மூலம், சர்வாதிகாரம் செலுத்துவது உண்டு—சிலகாலம். பிறகோ, சரியும், ஜனநாயகத்தின் தாக்குதலால்.

இங்கோ, பழைய ஏடு, மூடநம்பிக்கை எனும் ஆயுதங்களைக்கொண்டு, பெரும்பான்மைச் சமூகத்தை வீழ்ச்சி அடையச் செய்துவிட்டுச் சிறுபான்மை வகுப்பு, சர்வாதிகாரம் செய்கிறது.

சமுகநீதி மாநாடு

சென்னையில் அவசரத் தனிமாநாடு, – சமூக நீதி மாநாடு – புதனன்று நடைபெற இருக்கிறது. விவரம் துண்டு வெளியீடுமூலம் கிடைக்கும்.

தி. மு. கழகம்.

இந்தக் கொடுமையை அடக்கி ஒடுக்கிவைத்தனர் நம் தலைவர்கள். டில்லிச் சட்டம் கட்டுண்டு கிடந்த இக்கொடுமையின் தளையை அறுத்துவிட்டு, போ! போ! உன் பசி தீர இரை தேடிக்கொள்—என்று கூறிவிட்டது.

பார்ப்பனரல்லாதார் சமுதாயம், இனி என்ன செய்வது என்ற கேள்வியே, பொறுப்புள்ளவர்களின் விழி கூறும் மொழி! வகுப்பு ஏதேச்சாதிகாரம் வெற்றிபெற்றுவிட்டால், பெரும்பான்மைச் சமூகம் சகல முனைகளிலும், அடிமை நிலையை அடையும், சமூகத்தின் கட்டுக்கோப்பிலே, ஒரு பயங்கரமான 'விரிச்சல்' ஏற்பட்டுத் தீரும். மறைந்து கிடந்த, மங்கிக் கிடந்த மாச்சரியம், புதுவேட்டையிலீடுபடும்; சமூகத்தின் அமைதிக்கும் கேடுவரக்கூடும்

காங்கிரஸ் வட்டாரத்துத் தலைவர்கள், திராவிடத் தலைவர்கள் இருக்கும் திக்கு நோக்கி, அபாயச் சங்கு ஊதும் நாள் பிறந்தே தீரும்.

ஜஸ்டிஸ் கட்சியின் திட்டத்தைத் தகர்த்துவிட்டதால், மனமகிழ்ச்சி கொள்ளும், சிறுபான்மைச் சமூகத்தைச் சார்ந்த, சுயநலக்காரர்கள் வினை விதைக்கிறார்கள் — பலனை இந்தத் தலைமுறையிலேயே காண்பார்கள். வகுப்புகளுக்குள் விரோதம் மூளவும், அதன் பயனாக, மக்கள் மனதிலே குமுறல் ஏற்படவும் போகிறது. அறிகுறிகள் இப்போதே, தெரிய ஆரம்பித்துவிட்டன.

ஏகலைவனிடம், 'கட்டை விரலை' வாங்கியாகிவிட்டது—கட்டை விரலை இழந்த ஏகலைவன் வாளாயிருக்கக் கூடும்—ஆனால் அவன் பிறந்த சமூகம் வாளாயிருக்குமா!

ஆதிக்கக்காரர், உடனடி இலாபத்தால்; உச்சி குளிர்ந்து விடுகிறார்கள் — எதிர்காலத்தில் எவ்வளவு பெரிய ஆபத்துக்கு அச்சாரம்கொடுத்துவிட்டோம், என்பதை அறியாமல்.

கட்டுப்படுத்தமுடியாதவிதமாக, கயமைத்தனத்தைத் தூபதீப நைவேத்தியம் வைத்து வரவழைத்துக்கொள்ளுகிறார்கள்—எங்கும், சேரன் செங்குட்டுவன்களைக் காணப்போகிறார்கள் — கதர் உடையிலேயும் காணப்போகிறார்கள்—வெற்றிக்களிப்பு கருதுவதற்குள்.

அணையை உடைக்கிறார்கள், வெள்ளம்என்ன செய்யும் என்பதை அறியாமல்.

நமக்கு நிரம்பவேலை கொடுத்துவிட்டார்கள் — மறந்துவிடுவோம் பிரச்னையை என்று மனதார எண்ணிக்கொண்டு, பார்ப்பனர் அல்லாதார் பிரச்னையைப்பின்னணிக்குக்கொண்டுவந்துவிட்ட நம்மை, மீண்டும், மக்கள் மன்றத்திலே, வழக்குத் தொடுக்கச் செய்கிறார்கள்.

மக்கள் மன்றத்துச் சட்டம் வேறு.

அது சமுகநீதியை அடிப்படையாகக்கொண்டது. அங்கு நாம் வெற்றி பெறத்தான் போகிறோம்—அதற்கான, அணிவகுப்பை, இந்தத்தீர்ப்பின்மூலம், நாம் விரைவில் அமைத்துக்கொள்ளத்தான்போகிறோம்.

சமர்த்தான காரியமடி, சரசு! பார்த்தாயா, இந்த மந்திரிகள் சேர்ந்தப் பேர்ந்த விழிக்கிறா!!—என்று உல்லாச உரையாடல் நடைபெறக் கூடும்.

ஏண்டா, தடியா! வீணாகப் படிக்கிறே—உனக்கு இனி ஏது இடம் கல்லூரிகளில்—என்று வேதனைக் குரலில் பேசும் பேச்சுக் கிளம்பியிருக்கிறது.

சட்ட சபையை ஆட்டிவைக்க முடிகிறது, கவர்னரைக் கனிவாக இருக்கும்படி செய்ய முடிகிறது, தொழிலாளர் தலைவர்களை மண்டையிலடித்து உட்காரவைக்க முடிகிறது, திராவிட இயக்கத்தாரை அடக்கு முறைக்கு ஆளாக்க முடிகிறது—இவ்வளவும் இதற்கு மேலும் செய்ய, ஆற்றல் இருக்கிறது அமைச்சர்களுக்கு, ஆனால், சிறுபான்மைச் சமூகத்திலே சிலர் எதிர்த்து வேலை செய்யும்போது, அமைச்சர்கள் "மூன்றும் பேஸ்துகள்" ஆகவேண்டியல்லவா நேரிடுகிறது. அமைச்சர்களை இந்தக் கோலத்திலா காணவேண்டும். பட்டம் இருக்கிறது அமைச்சர் என்று, ஆனால் கம்யூனல் திட்டத்தைக் காப்பாற்றும் ஆற்றலைக் காணோம்"—என்று கலக்கக் குரலில் பலர் பேசுகின்றனர்.

சீறிடும் தேசிய சிங்கங்கள், இந்த வர்ணாஸ்ரமத் தாக்குதலைக்கண்டு, எலியானார் முயலானாரே!—என்று ஏளனமாகப் பேசுபவரும் உளர்.

இந்த வகையான பேச்சு இனி, மேலும் மேலும் வளரும்.

அமைச்சர்கள், சட்ட சபையிலேயும் வெளியிலேயும், இந்தக் கம்யூனல் ஜீ. ஓ. வைப் பலமாக ஆதரித்துள்ளனர்—எனவே அந்தத் திட்டம் அழியாதபடி பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு அவர்களைச் சார்ந்தது. அந்தப் பொறுப்பை மறப்பது, பண்பாகாது—தட்டிக் கழித்துவிட முயல்வது ஆண்மையாகாது—நாம் என்ன செய்வது என்றுபேசுவது அறிவுடைமையாகாது. உள்ள உறுதியுடன், அமைச்சர்கள், இந்த நிலைமையை மாற்றி அமைக்க வழிவகை கண்டாக வேண்டும். இப்போதாகிலும், இடிமேல் இடி பட்ட பிறகாவது, யார் வகுப்புவாதிகள், எது வகுப்புவாதம், என்று நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூற—உண்மை பேச—முன்வர வேண்டும்.

மாகாண சர்க்காரின் திட்டங்களைப் புது அரசியல் திட்டம் எவ்வளவு எளிதாக உடைத்தெறிகிறது என்பதை விளக்கவேண்டும்.

டில்லியின் ஆதிபத்யத்தையும், அதனுடன் தொடர்பும் பங்கும் கொண்ட, அல்லாடி போன்றாரின் ஆதிபத்யத்தையும், வெட்கமின்றி, விளக்கியாக வேண்டும்.

மாகாண சர்க்கார் ஒரு பஞ்சாயத்துப் போர்டுக்குச் சமமாகவே இருந்து வருகிறது என்பதையும் எடுத்துக் காட்டவேண்டும்.

மாகாணத்தின் மாண்புக்காக, மக்களின் எதிர்காலத்துக்காக, வகுப்புநீதிக்காக, எவ்வளவு கஷ்ட நஷ்டம் ஏற்கவும் தயார், என்பதை டெல்லி உணரும்படிச் செய்யவேண்டும்.

பதவியை உதறித் தள்ளும் துணிவு ஏற்பட வேண்டும்—இந்த அமைச்சர்களுக்கு. இவர்களிடம் நாடு, இவ்வளவும் எதிர்பார்க்கிறது தன்மானத்தை இழக்காதிருக்க வேண்டும் என்று கூறுகிறது. என்ன செய்யப் போகிறார்கள்?

வெற்றி பெற்றவருக்கு ஒரு வார்த்தை! இந்த வெற்றி, இனிப்பாகத்தான் இருக்கும்—துவக்கத்தில். ஆனால இதன் முழு விளைவுகள் பிறகே தெரியும்.

மாகாண சர்க்காரையும் மந்திரிகளையும் மல்லுக்கு இழுத்து மண் கவ்வச் செய்தார்களே, இவர்களலவா வீராதி வீரர்கள், என்று மட்டும் ஆச்சரியப்படுவார்கள் என்று எண்ணி, ஏமாற வேண்டாம். இவ்வளவு ஆற்றலுள்ளவரையும் வீழ்த்தக்கூடிய தந்திரம் தெரிந்திருக்கிறதே இந்தச் சிறுபான்மைச் சமூகத்திலே உள்ள சிலருக்கு, எவ்வளவு ஆபத்தான மனிதர்கள் இவர்கள் என்று நாடு எண்ணும், பேசும்.

இன்று நேற்றல்லவே, பல தலைமுறைகளாக, எத்தனையோ விதமான, ஆட்சிக்காலத்திலும், இப்படித்தானே வகுப்பு ஆதிக்கம் புகுத்தப்பட்டது, என்று பேசப்படும். அந்தப் பேச்சு, நாட்டிலே எத்தனை இலட்சம் வீரர்களை 153-க்கு இழுத்துச் செல்லுமோ நாம் அறியோம்!

வெற்றி பெற்றவர்கள், தங்கள் வகுப்பின் இன்றைய போக்கு, முன்னாள் நிலை, ஆதிக்க சுபாவம், ஆதிக்கத்துக்காகக் கையாளும் தந்திரம் சகலமும் பொதுமக்கள் மன்றத்திலே பேசப்படுவதைக் காணத்தான் போகிறார்கள்.

அல்லாடியாரும், சீனுவாசஐயங்காரும்செய்த திருத்தொண்டு, மனுவையும் மாந்தாதாவையும், பதஞ்சலியையும் சாணக்கியனையும், மக்களின் நினைவிற்குக் கொண்டுவந்து நிறுத்தும்—நாட்டிலே வகுப்புகளுக்குள் இன்று ஓரளவுக்கு ஏற்பட்டுக்கொண்டுவரும், சமரசம் பாழ்படும். இது, நாட்டுக்கு நல்லதல்ல, நல்லதோர் வெற்றி பெற்றோம் என்று இன்று பூரிக்கும் வகுப்பினருக்கும் நல்லதல்ல.

வெற்றி பெற்றோம், என்று வீறுப்பு பேசிக்கொண்டு, அந்தச் சிறுபான்மைச் சமூகத்திலே உள்ள, சுயநலமிகள் உலவுவது காணும்போது, புள்ளிமானைக் கொன்று தின்றுவிட்டு, இரத்தம் வாயில் சொட்டச் சொட்ட புதாருகே உலவும் புலியின் கவனம்தானே வரும்!!

உள்ளது ஒரு கம்பு—இருவர் கேட்கின்றனர், எனக்கு, உனக்கு என்று—ஒருவன் கரடுமுரடான பாதையிலே, கடும் வெயில் வேளையிலே பாரமான சாமானைச் சுமந்து வந்ததால், களைத்துக் கால் கடுத்துப் போய், ஊன்றுகோல் கிடைத்தாலொழிய நடந்து செல்ல முடியாத நிலையில் உள்ளவன்—மற்றவனோ, உல்லாச நடை நடக்கும்போது, அந்தக் கம்பு, தன்னிடம் இருந்தால், அலங்காரமாக, அந்தஸ்தாக இருக்கும் என்ற எண்ணத்துடன் இருப்பவன்—இருவரில், 'கம்பு' யாருக்குத் தரப்பட வேண்டும்?

காசநோய் — மருத்துவர் தந்திருக்கிறார் சூரணம்—சாப்பிட்டால்தான் வேதனை தீரும்—சூரணத்தைத் தேனில் குழைத்துச்சாப்பிட்டாக வேண்டும்—தேன் கேட்கிறான், அந்த நோயாளி—தேவாலயத்திலே தரப்பட்ட கனியைக் கையில் வைத்துக் கொண்டு, இதைத் தேனில் தோய்த்துச் சாப்பிட விருப்பம், ஆகவே, தேன் எனக்குத் தருக, என்று கேட்கிறான், வாழ்வின் சுவை விரும்பி — தேனுடன் தெளிவும் கொண்டவன் யாருக்குத் தருவான், தேன்!

வாடும் பயிருக்கு நீர் பாய்ச்சுவர்—விளைந்த வாழ்வை நிமிர்த்துவர்—வகை குலைக்கப்பட்டவருக்குக் கை கொடுப்பர், கண்ணும் கருத்தும் கெடாத கண்ணியவான்கள்.

பசி ஏப்பக்காரனுக்குக் கஞ்சிக் கலயமும், புளி ஏப்பக்காரனுக்கு மருந்து வட்டிலும் தரப்படுவதுதான் முறை என்று கூறுவர் மனித மாண்புணர்ந்தவர்கள்.

இருள் சூழ்ந்த இடத்துக்கு விளக்கொளி தேவை—இடர்பட்ட வாழ்வில் உழல்வோருக்கு உதவி தேவை.

மக்களின் நிலைமையைக் கண்டறிந்து, எவரெவர் எந்தெந்த நிலைமையில் உள்ளனர், அவரவருக்கு உற்ற குறைபாடுகள் யாவை, அவைதமைக்களைய எம்முறையைக் கைக்கொள்ளவேண்டும் என்பதை ஆய்ந்து அறிந்து, ஆவன செய்து, ஒரு நாட்டு மக்களிடையே, ஏற்றத் தாழ்வு, சமூக அமைப்பையே குலைத்துவிடக் கூடியதாக இருக்குமானால், நிறைகெடாத நிலையை உண்டாக்கக் கூடிய முறைகளை வகுத்தலே நல்லாட்சியாளர் செய்யவேண்டிய கடமை—அதுவே ஆட்சியின் மூலம் மக்கள் பெறவேண்டிய பேறு.

ஓநாயை வேட்டைக்காரன் கொன்றுவிடாமல் பாதுகாப்பது அல்ல, நீதி-ஓநாய், ஆடுகளைக் கொன்றுவிடாமல் பாதுகாப்பதுதான். நீதி — நேர்மை.

வலுத்தவன் இளைத்தவனை ஏவலனாக்கிக் கொள்ளக்கண்டு, அது அவனவன் திறமையைப் பொறுத்தது என்று அறிவும் அன்பும்ஒருசேரப் பெற்ற எவரும் கூறார்—அங்ஙனம் கூறுவோர ஆட்சியாளர் ஆகிவிட்டால், நாடு, காடு ஆகும்.

நம்நாடு, சமுக ஏற்றத்தாழ்வு மிகுந்துள்ள இடம் என்பது, வாதத்துக்குரிய விஷயமல்ல — உலகறிந்த உண்மை.

ஏற்றத்தாழ்வு, ஏன் ஏற்பட்டது, யார் ஏற்படுத்தினார்கள், என்பதும், இனி நாம் கூறி, மக்கள் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயமல்ல — நாடு அறிந்த இரகசியம்—நானிலம்கைகொட்டிச் சிரிக்கும் கேவலத்தன்மைவாய்ந்த விஷயம்! — அவனி அறியும்.

இந்த ஏற்றத்தாழ்வின் பலனாக, சமுகத்திலே வேதனையும் வெறுப்பும், மாச்சரியமும் மனத்தாங்கலும், போட்டியும் பூசலும் மலிந்து கிடப்பதையும் யாரும் மறுக்கமுடியாது.

சமூகம், குமுறும் எரிமலையாகிக்கிடப்பதை மறைத்துப் பயனில்லை.

சமூகத்தின் கட்டுக்கோப்பு, நிலை குலையக் கூடிய அளவுக்கு, வகுப்புக்கு வகுப்பு, நிலைமையில் வித்யாசம்-நினைப்பில் வித்யாசம் இருக்கிறது—இதனையும் யாரும் மறுக்கத்துணியமாட்டார்கள்.

அவனவன் வினைப்பயன் — அயன் அன்று எழுதியது—ஆண்டவன் அவனை உயர்ந்த ஜாதியாகப் பிறப்பித்துவிட்டான்—என்று பேசுவதும் நம்புவதும், பழங்கதையாகி விட்டதுடன், அவன் ஏன் உயர்ந்தான், எப்படி உயர்ந்தான், அந்த 'உயர்வு' எவ்வளவு 'கேடு' செய்கிறது என்பதுபற்றி, எண்ணவும் பேசவும் மக்கள் முன்வந்து விட்டனர். இந்த விழிப்புணர்ச்சியின் காரணமாக, சமூகத்திலே புதுநீதி காண வேண்டும், என்ற உரிமை உணர்ச்சி கிளம்பிற்று. நாமும் வாழப் பிறந்தவர்கள்தான் — நாமும் இந்நாட்டுக் குடிகள்தாம் — நாம் யாருக்கும் தாழ்ந்தவர்களல்ல—யாரையும் நாம் தாழ்வாகக் கருதவும் கூடாது — என்ற அறிவுடைமைப் பேச்சு கிளம்பிற்று.

கல்வி நிலையங்களில், உத்யோக மண்டலங்களில், ஊராட்சி மன்றங்களில், பயன் தரும் அலுவலகங்களிலே எல்லாம், ஒரே வகுப்பார், ஏகபோக மிராசு செலுத்துகிறார்களே!—ஏன்? எப்படி? ஏன் இப்படி ஒரு நிலைமை வளர்ந்தது? அதோ ஆசிரியர் அரங்கசாமி அய்யர் போகிறார், இதோ பார் வக்கீல் வரதாச்சாரியார், டாக்டர் ரங்காச்சாரியாரின் ரோல்ஸ் ராய்ஸ் பார்! கலெக்டர் கலியாணராமய்யர், ஆடிடர் அனந்தாச்சாரியார், தாசில்தார் சுந்தரராஜ அய்யங்கார்!—என்று பேசப்பட வேண்டிய விதமாக, உத்யோக மண்டலம் ஒரு வகுப்பாரின் ஏகபோக மிராசு பாத்யதையாக இருந்தது. சகல துறைகளிலும், வாழ்வில் மேன்மையும் பயனும் தரத்தக்க சகல முனைகளிலும், ஒரே வகுப்பார் குவிந்துவிட்டனர்—அதிலும் அந்த அளவுக்கு ஏகபோக மிராசு செலுத்திய வகுப்பு, சமூகத்திலே பெரும்பான்மை வகுப்பல்ல — சிறு பான்மையினர்—100-க்கு 3 பேர்!

இந்த நிலைமையைப் புரிந்துகொள்ளவே, தெளிவு தேவைப்பட்டது.

அந்த வகுப்பு, 'மேல் குலம்' 'ஆளப் பிறந்த குலம்', ஆண்டவனாலேயே அவ்விதம் படைக்கப்பட்ட குலம்—என்ற மூடநம்பிக்கை முறியவே நெடுங்காலம் பிடித்தது.

இந்த மூடநம்பிக்கையை முறியடிக்கப் பலர், 'நாத்திகர்' என்ற நிந்தனையையும், மதத்துவேஷி என்ற பழியையும் ஏற்றுக்கொள்ள வேண்டி நேரிட்டது—தயங்கவில்லை! வெற்றியும் கிட்டாமலில்லை! ஒருவகுப்பை, பிறப்பாலேயே மேலானது, ஆளப்பிறந்தது, முகத்தில் தோன்றியது, பூதேவர் என்று எண்ணுவது, மடைமை, எண்ணச் செய்வது கொடுமை, என்ற உண்மையை மக்கள் உணர்ந்தனர், உணர்ந்தபிறகு கேட்டனர், உரிமைக்கனல் உமிழும் கண்களுடன், ஒரு சிறு வகுப்பு இவ்வளவு பெரும் பலனை அனுபவிப்பதா? மிகப் பெரிய வகுப்பு, பாடுபட்டுப் பலன் காணாத கூட்டமாக நலிவதா, இது அறமாமோ, முறையா, ஆட்சியாளர்கள் இதை அனுமதிக்கலாமா? — என்று கேட்டனர்—முதலில் மிகச் சிலர் கேட்டனர், பிறகு, பலப்பலர்—பிறகு நாட்டின் பெரும்பான்மையினர் கேட்கலாயினர்.

ரங்காச்சாரியார் போன்ற திறமையுள்ள டாக்டர் கிடையாது என்று அல்லாடி ஐயர் சொன்னதை அரியக்குடி ஐயங்கார் கேட்டுக்கொண்டிருந்ததாக கஸ்தூரிஐயர் பத்திரிகையிலே எழுதிய கட்டுரையை ஜஸ்டிஸ் சதாசிவஐயர் படித்துவிட்டு வெங்கட்ரமணஐயர் வீட்டிற்குப்போக அங்கு அவர் கிட்டப்பாஐயருடைய சங்கீதஞானத்தை பிடில் கிருஷ்ணய்யருடைய ஞானத்தோடுஒப்பிட்டுப்பேசக்கேட்டுப், பூரித்தார்என்று தெரிய வருகிறது—என்று இம்முறையிலே 'சேதி' வந்து கொண்டிருந்தது.

மனம் எவ்வளவு குமுறி இருக்கும், விஷயமறிந்தவர்களுக்கு.

ஒருநாடு வளமாவதும், பாதுகாக்கப்படுவதும், அந்நாட்டு மக்களின், உழைப்பால், வீரத்தால்; தியாகத்தால்! ஒருநாட்டு ஆட்சி நடைபெற, வரி தருவது அந்நாட்டு மக்கள். நாட்டுக்குத்தேவையான உழைப்பும், ஆட்சிக்கு அவசியமான வரியும் தரும் மக்களிலே, பெரும்பான்மையினர், ஒரு சிறுபான்மையினரிடம் சகல துறைகளையும் ஒப்படைத்துவிட்டு, உழைப்பாளிகளாக இருப்பது எந்தவகையான நியாயம்? போரிடவும் உழைக்கவும், வரிகொடுக்கவும் நாங்கள் —வாழவும், அதிகாரம் செலுத்தவும், கல்வி வசதி பெறவும் அவர்களா! அவர்கள் மிகச்சிலர் — நாம் மிகப்பலர்! அவர்கள் ஆதிக்கம் செய்வது, நாம் ஆளடிமையாவதா! இது ஏன்? இந்த வேதனை தரும் விசித்திரம் வேறு எங்கேனும் உண்டா? வேறு எந்த நாட்டிலேனும் இந்த முறையை முறியடிக்காது விடுவரா? கண்ணுள்ளோரே! காணுங்கள்! காதுள்ளோரே, கேளுங்கள்! வாயுள்ளோரே பேசுங்கள்! வீரர்களே! விழித்தெழுங்கள்! விடுதலைவிரும்பிகளே! உரிமைக்குப் போரிடுங்கள்!—என்ற முழக்கம் திக்கெட்டும் கேட்கலாயிற்று.

ஆதிக்கக்காரர்கள் அஞ்சினர் — ஆண்டவனைக் கேள்வி கேட்கும் திறமும் நெஞ்சுரமும் அடிமைக்கு உண்டாகிவிட்டதே, அங்குசம் இருக்குமிடத்தை துதிக்கையால் யானை தடவிப் பார்த்துக் கண்டுபிடித்து விட்டதே — என்ன செய்வது என்று ஏங்கினர். மேலான ஜாதியாக அயனால் படைப்பிக்கப்பட்டவர்கள் நாங்கள் என்ற பழைய பேச்சு பயனற்றுப் போனது கண்டனர்—புதிய, பல்லவி பாடலாயினர்.

யார் வேண்டாமென்றார்கள், நீங்களும் படித்துத் தேறி—பட்டம் பெற்று, டாக்டராகவும் என்ஜினீயராகவும், வக்கீலாகவும் கலெக்டராகவும், ஆசிரியராகவும் ஆடிட்டராகவும் உத்யோகம் பாருங்களேன் — யார் தடுக்கிறார்கள்! என்று பேசினர், மேதைகள் என்ற பட்டியலில் தங்கள் பெயரைப் பொறித்துக்கொண்டவர்கள்,

சரி, என்று அந்த அறைகூவலை பெரும்பான்மையினர் ஏற்றுக்கொண்டனர—கல்வித் துறையிலே கண்ணோட்டம் சென்றது—ஆனால், அங்கோ!! அந்தச் சிறு வகுப்பின் 'கோட்டை' யாகக் கிடந்தது கல்வி நிலையங்கள்.

"உன் நாக்கிலே தர்ப்பையைப் போட்டுக் கொளுத்த வேணுமடா, மண்டு"

"உனக்கேன்டா, படிப்பும் பட்டமும், உன் தோப்பன் வேலையை நீயும் செய்—அதுதான் முறை"—என்று பேசும் ஆசிரியர்கள்—இரண்டெழுத்து படித்தது போதும் குடும்பத்தைக் கவனிக்க, ஏதோ ஒரு 'கடை கன்னிக்'குச் சென்று, நாலோ எட்டோ பெற்றுவாடா, என்று ஈனக் குரலில் பேசும் பெற்றோர்—இவ்விதச் சூழ்நிலை! — இதிலே உழன்றதன் விளைவாகத்தான், மேலும் ஓர் புதிய உண்மை புலனாயிற்று—நாட்டிலே நல்ல நிலையும் உத்யோக மண்டலத்திலே உரிய பங்கும் பெற வேண்டுமானால், முதலிலே கல்வித் துறையிலே வகுப்பு நீதி கிடைக்க வேண்டும்—வசதி கிடைத்தாக வேண்டும், என்று, கூறினர். இந்த அடிப்படை நியாயத்தை வலியுறுத்தி, வெற்றி கண்டது ஜஸ்டிஸ் கட்சி. அதன் திட்டந்தான், கம்யூனல் ஜி. ஓ. சமூக நீதிக்காக, வகுப்பு எதேச்சாதிகாரம் ஏற்படாதிருக்க. ஏகபோக மிராசு முறையை ஒழிக்க, சிறுபான்மையோர் ஆதிக்கம் அழிந்துபட, பெரும்பான்மையோர், புது வாழ்வு பெற, ஏற்படுத்தப்பட்ட திட்டம்.

வகுப்புவாரி பிரதிநிதித்வமுறை.

இதன்படி கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கப்படுவதும், உத்யோகங்களில் இடம் தரப்படுவதும், வகுப்புவாரி முறைப்படி நடைபெற்றுக் கொண்டு வந்தது.

இந்த வகுப்பு நீதி முறையின் பயனாகத்தான், நாட்டின் பெரும்பான்மை மக்களான பார்ப்பனரல்லாதாரின்

அறிவுக் கண் திறக்கப்பட்டு, உரிமை உணர்ச்சி ஏற்பட்டு உத்யோக மண்டலத்தில் புக வழி ஏற்பட்டு ஓரளவு முன்னேற்றம் அடைய முடிந்தது.

B. A. என்றும், M. A. என்றும், மாஜிஸ்ட்ரேட் என்றும், தாசில்தார் என்றும், இன்ஸ்பெக்டர் என்றும், ரிஜிஸ்ட்ரார் என்றும், டாக்டர் என்றும், என்ஜினியர் என்றும், புரபசர் என்றும், ஆபீசர் என்றும், பெயர் சொல்லிக்கொள்ளக்கூடிய நிலை, ஒரு சிலருக்காவது, பார்ப்பனரல்லாதார் சமூகத்தில் ஏற்பட்டது.

பாலைவனம் ஆக்கப்பட்டிருந்த சமூகத்தில் சோலைவனம் அமைக்க அடிப்படை திருத்தப்பட்டது. சமுதாயத்தின் கட்டுக்கோப்பு குலைந்து விடுமோ என்ற அச்சம் ஒழிந்து. பெரும்பான்மையினரைப் பிடித்தாட்டிவந்த பீதியும் பீடையும் ஓரளவுக்கு ஒழிக்கப்பட்டு, பெரும்பான்மை வகுப்பினர், தலை நிமிர்ந்து நடக்கவும், தன்மானம் பெறவும், உரிமையுடன் உலவவும் முடிந்தது. பாலைவனமாகிக் கிடந்த பெரும்பான்மை வகுப்பிலே, பாரோர் கண்டு வியக்கத்தக்க மேதைகள் தோன்றலாயினர்—எல்லாத் துறைகளிலும் வெற்றி கிடைத்தது. சந்தர்ப்பம் தரப்படாததால், பெரும்பான்மை வகுப்பு தாழ்வுற்றுக் கிடந்ததேயன்றி, அறிவு வளமும் ஆற்றலும் அறவே அற்றுப்போனது அல்ல, பெரும்பான்மைச் சமூகம் என்ற உண்மை உலகுக்கு அறிவிக்கப்பட்டது—உரிமைக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தவர்கள் உவகை அடைந்தனர்; மாசு துடைக்கப்பட்ட மணி என ஒளிவிடத் தொடங்கிற்று பெரும்பான்மை வகுப்பு. திறமை என்பதும், அறிவு ஆற்றல் என்பதும், ஏதோ ஒரு வகுப்புக்கு மட்டுமே பரம்பரைச் சொத்து அல்ல—என்று மார் தட்டிக் கூற முடிந்தது பெரும்பான்மையினரால் — ஏக போக மிராசு பாத்யதை அழிந்துவந்தது—சர்வம் பார்ப்பன மயம் ஜகத்!—என்ற நிலைமை மாறி, கலெக்டர் கலியாணராமய்யரைத் தாசில்தார் தீர்த்தகிரி முதலியார் வரவேற்றார் என்றும், வக்கீல் வரதாச்சாரியாருக்கு டாக்டர் அண்ணாமலைப்பிள்ளை ஆபரேஷன் செய்தார் என்றும், ஆசிரியர் அருமைநாயகத்தைப் பற்றி ஆடிடர் சுந்தரராமய்யர் பாராட்டினார் என்றும்—இவ்விதமான பேச்சு, நாட்டிலே பேச முடிந்தது.

இது பொறுக்கவில்லை ஆதிக்கக்காரர்களுக்கு!

வகுப்புவாரி முறையின் துவக்க முதல், அதைத் தொலைத்த நாள்வரை, போரிட்டவண்ணம் இருந்தனர்—பல வழிகளாலும்.

வாசகர்களுக்கு

—❀—

சென்ற வாரம் போல் இவ்வாரமும் அதிக பக்கங்களுடன் "திராவிட நாடு" வெளிவருகிறதென்ற போதிலும், விலை வழக்கம்போல் இரண்டணாதான். அடுத்த வாரத்திலிருந்து இப்போது வரும அளவில் எட்டுப்பக்கங்களுடன் தொடர்ந்து வெளிவரும். விலை 0—2—0 என்பதை வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மானேஜர்
திராவிடநாடு.

வெற்றிபெற்றும் விட்டனர்—வகுப்பு வாதிகள். வகுப்பு. எதேச்சாதிகாரம் செய்ய, தகுதி என்ற தந்திராயுதத்தைப் பயன்படுத்தினர்.

எந்த வகுப்புவாரி முறை, சமூகக் கட்டுக்கோப்பைக் காப்பாற்றி வந்ததோ, எந்த வகுப்புவாரி முறை வகுப்பு எதேச்சாதிகாரத்தை ஓரளவு ஒழித்து, வகுப்பு நீதியை வழங்கிற்றோ, எந்த வகுப்புவாரி முறை, வரியில் பெரும்பகுதியைக் கொட்டிக் கொடுத்து, நாட்டைக் காக்க இரத்தம் சிந்திய பெரும்பான்மையினர் ஓரளவு கல்வி வசதி பெறவும் உத்யோக உரிமை பெறவும் உதவிற்றோ, எந்த வகுப்புவாரி முறைக்காக தியாகரின் தியாகமும், நாயரின் நுண்ணறிவும், பானகலின் பரிபாலனத் திறனும், நடேசனாரின் அறிவாற்றலும், முத்தையாவின் உத்திரவும் பயன்படுத்தப்பட்டதோ, எந்த வகுப்புவாரி முறைக்காக எண்ணற்ற இளஞ்சிங்கங்கள் பணியாற்றி வந்தனரோ, எந்த வகுப்புவாரி முறை ஒரு காமராஜரைக் காங்கிரசிலும் ஒரு குமாரசாமி ராஜாவை மந்திரி சபையிலும், ஒரு இலட்சுமண சுவாமியை வைத்தியத் துறையிலும், ஒரு எதிராஜை வக்கீல் துறையிலும், ஒரு ராஜமன்னாரை ஹைகோர்ட்டிலும், ஒரு பத்ரோவை போலீஸ் இலாகாவிலும், ஒரு சண்முகத்தை நிதி நிபுணர் துறையிலும், ஒரு ஆற்காட்டாரை அவனி அறிஞர்மன்றத்திலும், ஆட்சி செலுத்த உதவிற்றோ, அந்த வகுப்புவாரிமுறை சட்டவிரோதமாகிவிட்டது!

எந்த வகுப்புவாரி முறையை, மாற்றமுடியாது மாற்றினால், சமூக அநீதியும் வகுப்பு எதேச்சாதிகாரமும் வளரும்' ஆகவே எவ்வளவு எதிர்ப்பு கிளம்பினாலும், வகுப்புவாரிமுறையைக் கைவிடமாட்டோம், என்று நமது மாகாண அமைச்சர்கள், ஆண்மையுடன் பலமுறை கூறிவந்தனரோ, அந்த வகுப்புவாரிமுறை இனிச்செல்லுபடியாகாது என்று தீர்ப்பு தரப்பட்டுவிட்டது!

வகுப்புவாரி முறையை ஒழித்துக்கட்டித் தீருவது என்று சுயநலச் சூழ்ச்சிக்காரர்கள் கங்கணம் கட்டிக்கொண்டு வேலை செய்து வந்தனர், அவர்கள் வெற்றி பெற்றுவிட்டனர்.

முப்பது ஆண்டுகளாக நாடு முழுவதும் நல்லறிவாளர்கள் பேசிப் பேசி ஆதரவு திரட்டினர்—அந்த வகுப்புவாரி முறை, இதோ சட்டவிரோதம் என்று ஆகிவிட்டது!

அமைச்சர்கள். தமது அறிவாற்றலை இதற்கு அரணாக அமைத்தனர்— எனினும், அம்முறையை, சட்டத்தின் துணைகொண்டு முறித்துவிட்டனர். வகுப்பு எதேச்சாதிகாரிகள்.

அமைச்சர்களே! என்ன செய்யப் போகிறீர்கள்? சமூக நீதியைக் காக்கப் போரிடப் போகிறீர்களா, அல்லது சந்து பொந்து தேடி அலையப் போகிறீர்களா? சம உரிமை பேசும் தோழர்களே! இதோ, சிறுபான்மையோரின் எதேச்சாதிகாரம் மீண்டும் தலைவிரித்தாடப் போகிறது, அதற்கான சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது—என்ன செய்யப் போகிறீர்கள்?

உத்தமரே! ஓமந்தூராரே! கர்ஜனை புரியும் காமராஜரே! கொட்டு முழக்குடன் பேசிய கோபாலரே! பகை மூட்டாத வகையுடன் பேசும் பக்தவத்சலனாரே! நெஞ்சுரம் கொண்ட குமாரசாமியாரே! நேர்மையாளர்களே! நாட்டுத் தலைவர்களே! நிலைமையைக் கவனியுங்கள்! எதிர்கால வேலைத் திட்டம் என்ன?

(அடுத்த பக்கம் பார்க்க)

வருந்துகிறோம்

திருத்துறை பூண்டித் தோழர் ஹாஜிபீர் அவர்களின் மனைவியார் காதர்பீவி அம்மையார் 21—7—50 வெள்ளிக்கிழமை மாலை 4 மணி யளவில் இயற்கையடைந்துவிட்டார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். மனைவியை இழந்து வாடும் தோழருக்கு ஆறுதல் கூறுகிறோம்.

பெருங் கிளர்ச்சி வேண்டும்—உடனே

ஜனத் தொகைப்படி 'இடம்' தரவேண்டும்

'தகுதி'ப் பேச்சு தெகிடுதத்தத் திட்டம்

28 ஆண்டுகளாக இருந்துவந்த வகுப்புநீதி சாய்கிறது

பாரிஸ்டர் ரங்கராமானுஜம் வீர உரை

வகுப்புவாரி பிரதிநிதித்துவமுறை செல்லத்தக்கதல்லவென்று, சென்னை உயர்நீதி மன்றத்தார் தீர்ப்பு கிடைத்ததும், 'திராவிட நாடு' நிருபர் பாரிஸ்டர் ரங்கராமானுஜம் அவர்களைப் பேட்டிக்கண்டபோது, கீழ்க்கண்ட அறிக்கையைத் தந்தார். திரு. இரங்கராமானுஜம் அவர்கள் பார்ப்பனரல்லாதார் இயக்கத்திலும், நீதிக்கட்சியிலுமிருந்து பணியாற்றிய பிரபல வழக்கறிஞர் ஆவார்கள். அவரது அறிக்கை இது:—

1922-வது வருஷத்தில் ஏற்பட்ட கம்யூனல் ஜி. ஓ. 1950-ல் ஏற்பட்ட இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி செல்லாது என்று சென்னை உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்துவிட்டது. இதனால் சுமார் 28 ஆண்டுகளாக நம்முடைய மாகாணத்தில் பெருவாரி மக்களுக்குக் கல்வித் துறையில் சாதகமாகஇருந்த ஏற்பாடு ரத்தாகிவிடுகிறது.

பரீட்சையில் மார்க் மட்டுமே கருதப்பட வேண்டுமென்றால் குறிப்பிட்ட ஒரு வகுப்பினரே தான் முன்னுக்கு வர முடியும். அது, முறையாக இருந்தால் நம்முடைய நாட்டில் ஒற்றுமையென்பது சாத்தியமாகாது, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் எல்லா வகுப்பாரும் கல்வித் துறையில் சமத்துவம் அடையவேண்டுமென்று சொல்லியிருக்கின்ற பகுதிகள் உபயோகமற்றவையாகிவிடும்.

இந்தத் தீர்ப்பு சரியோ சரியில்லையோ என்பது குறித்து நமக்கு விசாரமில்லை. பிரதம நீதிபதி ராஜமன்னர் அவர்களும், நீதிபதி விசுவநாத சாஸ்திரி அவர்களும் மாணவர்கள் வாங்கும் மார்க்படியேதான் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறார்கள்.

ஆனால் நீதிபதி சோமசுந்தரம் அவர்கள் வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறை (கம்யூனல் ஜி. ஓ.) நியாயமானதென்று அபிப்பிராயப்படுகிறார். என்றபோதிலும் முடிவில் மற்றவர்களைத் தழுவியே தீர்ப்புத் தந்திருக்கிறார்.

மார்க்குப்படிதான் மாணவர்களை சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்கு எங்கேயும் ஆதாரமில்லை.

தகுதி (Merit) என்பதும், மார்க்குகள் என்பதும் ஒன்றல்ல.

தகுதி என்பது பலவிதமான அம்சங்களைக் கொண்டது, மார்க்கு என்பது பரீட்சையிலே ஒருவனுக்கு கிடைக்கின்ற எண்ணிக்கைதான். இந்த இரண்டும் ஒன்றாகாது.

உதாரணமாக,பிராமண வகுப்பைச் சார்ந்த கணித நிபுணரான இராமானுஜம் என்பவரை எடுத்துக்கொள்வோம். இவர் யுனிவர்சிடி பரீட்சையில் தோல்வியடைந்தார். ஏன்? மார்க்கில்லாமையால்! இவர் ஒரு உத்தியோகத்துக்குப் பிரயத்தனப்பட்டிருந்தால், சர்வீஸ் கமிஷன் இவரை எடுத்துக்கொள்ளாது, தள்ளிவிட்டிருப்பார்கள். ஆனால் அவரது பெயரும் கணித நிபுணத்துவமும் உலகப் பிரசித்தம். ஆதலால் மார்க்கு என்பதும் தகுதி (Merit) என்பதும் ஒன்றாகாது.

அப்படியே மார்க்குதான் முக்கியமென்று எடுத்துக்கொண்டாலும் பரீட்சையில்பலவிதமாக மார்க்குகள் வாங்கப்படுகின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். பரீட்சை முடிந்த பிறகு, பதவியிலுள்ளவர்கள், பணமுள்ளவர்கள், அதிகார ஸ்தானங்களிலுள்ளவர்கள், தங்களுடைய பிள்ளைகளுக்கு அதிக மார்க்கு கிடைக்க வேண்டுமென்று எடுத்துக்கொள்ளும் பிரயத்தனம், விடைத்தாட்களைத் திருத்துவோருக்கும் அந்தத் துறையிலுள்ள மற்றவருக்கும் தெரிந்த விஷயம். இந்த வகையில் பிராமணப் பிள்ளைகளுக்கு அதிகமானமார்க்கு வாங்குவதற்கு பலவிதமான சௌகரியங்கள் இருக்கின்றன.

மயிலாப்பூர் பிராமணப் பிள்ளை, முதன்மையாகத் தேறினால், அது, தன் சுய முயற்சியால் கிடைத்தது என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. தண்டையார்பேட்டையிலுள்ள கிராமணிப் பிள்ளை இரண்டாவது வகுப்பில் தேறினால் "தகுதி" என்பது கிராமணிப் பையனுக்கே உரியதாகும். இரண்டாவது வகுப்பில் தேறிய கிராமணிப் பிள்ளையும், முதல் வகுப்பில் தேறிய பிராமணப் பிள்ளையும் ஒன்றாகக் கருதப்படவேண்டுமென்பதுதான் நியாயம். இந்த நியாயத்துக்குப் பலவித ஆதாரங்கள் கூறலாம். இது நிற்க,

இனி, நாம் செய்யவேண்டியதென்ன? இந்தத் தீர்ப்பு சரியோ இல்லையோ என்பதுபற்றி சென்னை சர்க்காரே சுப்ரீம் கோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொள்ளப்போவதால், அதைப்பற்றி இப்போது நாம் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனாலும்; நம்முடைய நாட்டில் உடனே ஒரு பெருங் கிளர்ச்சி உண்டாகவேண்டும்.

சென்னை சட்ட சபை, சட்ட மூலமாக ஸ்தானங்களை வகுப்புவாரியாகப் பிரித்துக் கொடுக்கவேண்டுமென்று பார்லிமெண்டுக்குச் சிபார்சு செய்யவேண்டும். பிராமணர்களுக்கு (மார்க்குபடியல்ல) அவர்களுடைய ஜனத்தொகையின்படி ஸ்தானங்களைப் பிரித்துகொடுக்கும்படியாகக் கிளர்ச்சி செய்யவேண்டும். ✻

முன்னாள் அமைச்சர்

முத்தையா

அறிவுரை.

வகுப்புவாரி பிரதிநிதித்துவமுறையைக் கொணர்ந்து, பிற்பட்ட வகுப்பினருக்கு சம நீதி கிடைக்கவேண்டுமென்ற நோக்குடன், நிறைவேற்றிய முன்னாள் அமைச்சர் எஸ். முத்தையா அவர்கள், நமது நிருபருக்குப் பேட்டி தந்தபோது குறிப்பிட்டதாவது:—

"என்ஜினியரிங், மெடிகல், காலேஜ்களில்வகுப்புவாரிபிரதிநிதித்துவஉத்தரவுப்படி மாணவர்களைச் சேர்ப்பது இப்போதுள்ள சட்டத்துக்கு விரோதமென்று சொல்லப்படுகின்றது. இதர கல்லூரிகளுக்கும், இப்போதுள்ள முறைகளை மாற்றும்படியும் நேரிடும். ஆனதால் படிப்பில் மிகவும் குறைவாயுள்ள பிராமணரல்லாத ஜாதியினர்கள் அனைவருக்கும் அதாவது, முஸ்லீம்கள், கிருஸ்தவர்கள், ஆதித்திராவிடர் உள்பட, படிப்பு வசதி மிகக் குறையும். அதிக கல்லூரிகள் இப்போது துவக்குவதென்பது அசாத்தியம் என்று சொல்லுவார்கள். ஆனதால், இதனால் பாதிக்கப்படும் எல்லா மக்களும் இந்தச் சட்டத்தை மாற்றுவதற்கு கிளர்ச்சி செய்து, விடா முயற்சியுடன் வேண்டிய காரியங்களை செய்வது மிகவும் அவசியம். இதில் எல்லா மக்களும் கட்சி பேதமில்லாமல் ஒத்துழைத்துப் பாடுபட வேண்டுமென்பது நான் சொல்லாமலே தெரியும்.

இந்தச் சமயத்தில, மனத் தளர்ச்சியுடன் ஏங்கிப் போகாமல் தீரத்துடன் காரியங்களை நடத்தவேண்டும்."

(முன் பக்கத் தொடர்ச்சி)

சட்ட விரோதம்—கம்யூனல் ஜி. ஓ;—இது தீர்ப்பு.

என்ன செய்யப் போகிறீர்கள்?

சட்டத்தின்படி தரப்பட்ட தீர்ப்பை,ஏற்கத்தான் வேண்டும்—குறை கூறுவது அடாது.

ஆம்! சட்டம், சரி. சமூகம் இனி, என்ன ஆவது, புதிய நிலைமையின்படி?

சர்வம் மீண்டும் பார்ப்பன மயம்!—இதுதான் விளைவு—சரியா—அனுமதிக்கப் போகிறீர்களா? அறிவும் ஆற்றலும் இல்லை, அன்பும் அறமும் இல்லை, துணிவும் பண்பும் இல்லை, என்றால் அதையாவது வெளிப்படையாகக் கூறிவிடுங்கள், "பார்ப்பனரல்லாதாரே! பள்ளிகளிலே நீங்கள் முன்போல 'இடம்'பெற முடியாது — உத்யோக மண்டலத்திலே இடம் கிடைக்காது — எனவே, கட்டைவெட்ட கல் உடைக்க, குப்பை கூட்ட மாடு மேய்க்க, வண்டி ஓட்ட, மூட்டை தூக்க, செக்கு இழுக்க—இப்படிப்பட்ட 'துறைகளிலே' இடம் பிடித்துக்கொள்ளுங்கள்—மற்றத் துறைகளிலே நீங்கள் 'இடம்'பெற முடியாது—நாங்களும் நிலைமையை மாற்றவல்லவர்களல்ல— என்றாவது ஆளவந்தார்கள் கூறிவிடட்டும் — தியாகர் கல்லறைமீது கண்ணீர் சிந்திவிட்டு, நாம் கிளம்புவோம், உரிமைப் போர்க்களத்துக்கு, அறப்போர்மூலம், இழந்த உரிமையை மீண்டும் பெற! விரைவில் வெளிவரவேண்டும், ஆளவந்தார்களின் திட்டம் நாட்டுப் பெருங்குடி மக்களே! உங்கள் கருத்தைத் தெரிவியுங்கள், தெளிவாக! வந்தது விபத்து! அழிந்தது சமூக நீதி! இனி சர்வம் பார்ப்பனமயம்!! ஆம்! ஆம்! இந்த வேதனை தரும் நிலையை மாற்ற என்ன வழி? தலைவர்களே! ஒன்றுகூடிப் பேசி, திறம்படத் திட்டம் தீட்டுங்கள்—நாட்டு இளைஞர்கள் தயாராக உள்ளனர்—நீதியை நிலை நாட்டும் அறப்போரில் ஈடுபட்டுத் தியாகம்புரிய. வழி காட்டுங்கள் — விரைவில்.

✻

நடக்க இருப்பது

ooooo

நாகமநாய்க்கன்பட்டி :

5—8—50 சனி மாலை தோழர் கே. எஸ். செல்லமுத்து தலைமையில் தோழர் மு. கருணாநிதி, எஸ். அப்பாவு ஆகியோர் பேசுவர்.

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்

ooooooo

விருதுநகர்:- தி. மா. கழக உறுப்பினர்களின் பொதுக் கூட்டம 21—7—50 வெள்ளி மாலை சாயல்குடி இரா. சுப்பையா துவங்கிவைக்க நடைபெற்றது. அப்போது கீழ்க்கண்டவர்கள் 50—51-க்கு நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

இரா. சிலப்புச்செல்வன் செயலாளர், கே. முனிராசன்: துணைச்செயலாளர், பொ. கிருட்டிணசாமி பொருளார், பு. இராசதுரை வி. உறுப்பினர், தி. ஆறுமுகம், பெ. மா. சுந்தரராசன், ச. வசந்தன், கா. அப்துல்அஜீஸ் V. B. S. பாண்டியன் ஆகிய ஐவரும் செயற்குழு உறுப்பினர்கள்.

வெற்றிக் களிப்பு—வெள்ளம்போல் மக்கள்!

சென்னை திரண்டு நின்ற காட்சி!

கட்டாய இந்தி ஒழிந்தது; காளைகளின் எக்காளம்

பெத்துநாயக்கன்பேட்டையில் வெற்றி விழா!

மரக்கிளைகள்! மதிற்சுவர்கள்! கோயில் கோபுரம்! கட்டிடமாடி! வீட்டுக் கூரை! விளக்குக் கம்பம்! வாகன மண்டபம்! எங்கும், நிறைந்து கிடந்தனர் – 'எள் போட முடியாதபடி கூட்டம்' என்று கூறுவார்களே, அதை எடுத்துக் காட்டுவதுபோல இருந்தன, பெத்துநாயக்கன் பேட்டையின் வீதிகள்! எங்கு பார்த்தாலும் மக்கள் – எப்பக்கம் திரும்பினும் ஜனத் திரள்! காண்பது கனவோ அல்லது நனவோ என்று எண்ணும்படி, வெள்ளம்போல் மக்கள் திரண்டிருந்தனர்! அருகிலிருக்கும், கடல்தான் ஒருவேளை நகர்ந்து வந்துவிட்டதோ என்ற எண்ணத்தை எழுப்புவதுபோல மக்கள் இங்கும் அங்கும் அசைந்த காட்சி தோன்றியது!

"இந்த இடத்திலிருந்துதான் நமது அறப்போர் வீரர்கள் தினசரி புறப்படுவது வழக்கம். அதே இடத்தில், கட்டாய இந்தி ஒழிந்த நாளைக் கொண்டாடக் கூடியிருக்கிறோம், நாம்" என்று களிப்புக்கூட்டம் நடைபெற்ற காசி விசுவநாதர் கோயிலைக் குறித்து, சென்னைத் திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளரான தோழர். கே. கோவிந்தசாமி குறிப்பிட்டார்.

கட்டாய இந்தி ஒழிந்தது—என்ற களிப்புடன் மாணவமணிகளும், ஆசிரியர்களும், நகரப் பெருமக்களும், இயக்க வீரர்களும்–வீராங்கனைகளும், 'இதுவரை பெத்துநாயக்கன்பேட்டை இதுபோன்ற கூட்டத்தைக் கண்டதில்லை' என்று கூறும்படிக் குழுமிக் கிடந்தனர் – சென்னையே பெத்துநாயக்கன்பேட்டைக்குள் வந்துவிட்டதோ என்று ஐயுறுமாறு இருந்தது, வீதிகளெல்லாம் நிவிறந்து, அசையவு மிடமில்லாது, வழிந்து நின்ற கூட்டத்தைக் கண்டபொழுது.

களிப்புக் கூட்டத்திற்கு, இந்தி எதிர்ப்பு அறப்போரின்போது முதல் காப்டனாக இருந்து பணியாற்றிய தோழர் சி. டி. டி. அரசு தலைமை வகித்தார்.

அறப்போரின் சர்வாதிகாரியான சி. என். ஏ. வுக்கும், காப்டனாக இருந்த அரசுக்கும், அறப்போரிலீடுபட்ட வீரர்களுக்கும்–தோழியர்களுக்கும் சென்னைத் திராவிட முன்னேற்றக் கழகத்தினர், தங்களது அன்பின் அறிகுறியாக மலர் மாலைகள் சூட்டினர்.

"வெற்றி பெற்றோம்—இந்த வெற்றி நமது எதிர்காலத்தில் நாம் பெறப்போகும் வெற்றிகளுக்கான அறிகுறி" என்று மாணவர் கழகத் தலைவர் தோழர் கே. ஏ. மதியழகன் பேசியபோது பெருமிதத்துடன் வெளியிட்டார்.

மொழிப் போரில் மட்டுமல்ல இலட்சிய வெற்றிக்காக நடைபெறும் எந்தப் போரிலும் பங்குகொள்ள தாய்மார்கள் தயங்கமாட்டார்கள் என்று உறுதியுரைபுகன்று அறப்போர் வீராங்கனையான தோழியர் அலமேலு அப்பாத்துரை முழக்கமிட்டார்.

"ஏளனம் பேசினர் ஆளவந்தார். ஆனால் இன்று வெற்றியின் உச்சியில் விளையாடுகிறோம் நாம்! இந்த வெற்றி — நமது கொள்கையின் வெற்றி, எப்போதும் நமது கொள்கை வெற்றி பெறும் என்பதை அறிவிக்கும் வெற்றி!" என்று தோழர். இராம அரங்கண்ணல் கூறினார்.

ஆளவந்தாரின் போக்கு குறித்து கண்டித்து திருவொற்றியூர் தோழர் டி. சண்முகம் பேசிய பின், சென்னை பச்சையப்பன் கலலூரி தமிழ்ப் பேராசிரியர் தோழர் க அன்பழகன் பேசுகையில், கல்வித் துறையை காங்கிரஸ் ஆளவந்தார், எவ்வளவு மோசமாக்கி விட்டனர் என்று விளக்கினார். "இதுகளால் என்ன முடியும்? என்று கேட்டனர்–முடியும், பார்! என்று முழக்கிய வண்ணம் இன்று முழுவெற்றி பெற்றிருக்கிறோம்! வீம்பு வீழ்ந்தது–அறம் நிலைத்தது" என்றும் ஆர்வத்தோடு, முழக்கினார்.

அடுத்து, தி. மு. கழகப் பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாத்துரை, "கட்டாய இந்தி ஒழிந்துவிட்டது-களிப்புக் கடலில் திளைத்து நிற்கிறார்கள், மக்கள். மக்களின் மகிழ்ச்சியைக் காண நமக்கு களிப்பு இரட்டிப்பாகிறது" என்று துவங்கிப் பேசுகையில், கட்டாய இந்தி கூடாது என்று முழக்கமிட்டு அறப்போரிலீடுபட்டோர் நாம்; கஷ்டங்களைத் தாங்கியது நாம்! ஆகவே தான் இன்று கட்டாய இந்தி ஒழிந்தது–என்பதைக் கேட்டதும் களிக்கிறோம், மகிழ்கிறோம்" என்று கூறினார்.

அரிய வாய்ப்பு, வெகு விரைவில்!

தொடர்ந்து பேசுகையில் சி. என். ஏ குறிப்பிட்டதாவது, "தேர்தல் சூழ்ச்சியாக இருந்தாலும் சரி, அல்லது நம்முடைய எதிர்ப்புத்தான் காரணமாக இருந்தாலும் சரி, இரண்டு மில்லாது ஆளவந்தாருடைய புத்திசாலித்தனம் தான் காரணமென்றாலும் சரி, 'இந்தி கட்டாயமில்லை' என்று சர்க்கார் இன்று உத்திரவு பிறப்பித்ததற்கு ஏதாவது காரணம் இருக்கத்தான் வேண்டும்.

காரணமில்லாமல் காரியமில்லை—ஆகவே எது காரணமாக இருந்தாலும் சரி, கட்டாய இந்தி கூடாது என்று கூறியது நாம்தான்–எனவே, மகிழ்கிறோம். பத்து ஆண்டுகட்கு முன்னரே இந்தி கூடாதென்றோம்–ஆச்சாரியார் ஆணவத்தோடு நம்மைப் பார்த்தார். தாளமுத்து, நடராசன் இந்திக்காகப் பிணமாயினர்! 'எப்பக்கம் வந்துவிடும் இந்தி எத்தனைப் பட்டாளம் கூட்டி வரும்' என்று கூவிய வண்ணம் ஆயிரக் கணக்கில் சிறை சென்றோம். கடைசியில் இந்தி வீழ்ந்தது!

அந்தச் சரித்திரம் தெரிந்திருந்தும் அவினாசியார் இந்தியைப் புகுத்தினார்—அதை மாதவமேனன் வலியுறுத்தினார். நமது எதிர்ப்பைத் துச்சமெனக் கருதினார்கள். நாவலரும், பாவலரும், நாட்டுமக்களும் எதிர்ப்பது அறிந்தும் ஏளனம் செய்தனர். ஆனால் இன்று, போதி மரத்தடியிலே புத்தருக்கு ஞானோதயமானதுபோல மாதவமேனனுக்கும் உதயமாகியிருக்கிறது. இப்போது கூறுகிறார், அறிவு படைத்த அறிஞர்கள், பொது மக்கள், அதிகாரிகள் ஆகியோரின் விருப்பப்படித்தான் சர்க்கார் இயங்கவேண்டும் என்பதாக—அன்று திராவிட ரியக்கத்தாராகிய நாம் என்ன சொன்னோமோ அதைத்தான் இவ்வளவு நாட்கள் கழித்து அரசாங்கம் சொல்கிறது" என்று விளக்கினார்.

பாதை தவறினால் — பலம் உண்டு!

"சர்க்கார் இந்தி கட்டாயமில்லை என்று புது உத்தரவு பிறப்பித்ததற்கு காரணம் ஏதாவது தந்திரங் கலந்ததாக இருக்குமோ என்று சிலர் சந்தேகப்படலாம். அவர்களுக்கு ஒன்று நான் உறுதியாகச் சொல்வேன்.

ரயில், ஸ்டேஷனுக்கு வந்திருக்கிறது–தாமதமாகித்தான் வந்திருக்கிறது! தண்டவாளத்தை விட்டுக் கீழிறங்காதுதான் வந்துசேர்ந்திருக்கிறது—அதுவரையில் மகிழ்கிறோம். ஆனால், மீண்டும் ஸ்டேஷனை விட்டுக்கிளப்பி, பாதை தவறி, தண்டவாளத்தைவிட்டு இறங்குமேயானால் நம்மிடம் பலம் இருக்கிறது — அதைத் தடுத்து நிறுத்த! பலம் உண்டு என்று நிரூபித்துவிட்டோம்—நமது அறப்போர் மூலம். ஆகவே, எவரும் எத்தகைய சந்தேகத்துக்கும் ஆளாகவேண்டாம். இந்த ஆட்சியாளர், மக்களுக்கும், நாட்டுக்கும் கேடு விளைவிக்கும் கெடுதல் பாதையில் புகுவார்களேயானால் அதைத் தடுத்து நிறுத்த நம்மால் முடியும்!" என்று, கூறினார்.

ஐந்து ஏக்கரல்ல, நமது தியாகம்!

மேலும் தொடர்ந்து பேசியபோது, திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர், "கேலி பேசினர், அன்று! எனினும் அயர்ந்துவிடவில்லை நாம். நமது அறப்போர் தொண்டர்கள் கூட்டம் நடைபெறும் இந்த இடத்திலிருந்து, தினசரிபுறப்பட்ட காட்சியையும், போலீசார் அணிவகுத்து நின்ற காட்சியையும், அதைமீற மக்கள் துடித்து நின்ற காட்சியையும் மனக்கண்முன் கொண்டு வந்து பாருங்கள்! எத்தகைய கஷ்டநஷ்டங்களை நாம் தாங்கினோம் என்று விளங்கும். 'அஞ்சேல், வெற்றி நமதே!' என்று சொல்லியே துவக்கினோம்—இன்று அதேபோல வெற்றி பெற்றுவிட்டோம்!

இந்த வெற்றிக்காக அறப்போரில் நமது தாய்மார்களும் தோழர்களும் கலந்து கொண்டனர். தடியடிகளைத் தாங்கினர் — மழையையும் வெய்யிலையும் பொருட்படுத்தாது பள்ளிகளின் வாயிலிலே நின்று மறியல் செய்தனர் லாரிகளிலே போலீசார் இழுத்துச் சென்ற போதும் கலங்கவில்லை! கர்ப்பிணியான மாதை, சவுக்குக் காட்டில் நிராதரவாக போலீசார் விட்டபோதும் சித்தம் சோரவில்லை! இத்தனை கஷ்ட நஷ்டங்களிலும் ஈடுபட்ட நமதியக்கத்தவர், சிறு கடை முதலாளிகள், வீட்டுப் பொறுப்புடைய தாய்மார்கள், இளங்காளைகள்! இவர்கள், இத்தகைய கஷ்ட நஷ்டங்களையும் எதிர்நோக்கி அறப்போரிலீடுபட்டனர். எதற்கு? ஐந்து ஏக்கர் நிலம் கிடைக்கும் ஆசையாலா! இல்லை, நமது மொழிக்கு வரும் கேட்டைக் களையவேண்டும் என்ற கடமைக்காக.

நமது வேண்டுகோள் கிடைத்ததும், விரும்பி அறப்போரிலீடுபட்ட அத்தனை வீரர்களுக்கும் தாய்மார்களுக்கும், நமது அன்பை, மரியாதையை, பாராட்டுதலை, வாழ்த்துதலை உள்ளன்போடு தெரிவித்துக்கொள்கிறோம்" என்று தெரிவித்தார்.

தார் தொட்டி தூக்குவோம்!

ஆளவந்தார் நம்மீது எழுத்துரிமை பறிக்கும் வகையில் எடுக்கும் நடவடிக்கைகள் குறித்துக் குறிப்பிட்டார். (இப்பகுதி முதல் பக்கத்திலிருக்கிறது) பிறகு இரயில்வே நிலயங்களில், தமிழ்மொழியை உதாசீனப்படுத்தியிருக்கும் போக்கை எடுத்துக் காட்டிக் கண்டிக்கும்போது, "இரயில்வே ஸ்டேஷன்களில் ஊரின் பெயர் மாற்றி எழுதப்பட்டிருக்கிறது—அம்முறையைக் காண்போர் இதயம் துடிக்காமற் போகாது. தலைப்பிலே, வேண்டுமென்றே இந்திக்கு இடமும், கீழே தாய்மொழிக்கு இடமும் தந்திருக்கின்றனர் ஆளவந்தார். இதுபற்றி, ஏற்கனவே பலமுறை எடுத்துக் காட்டி கண்டித்து வந்துள்ளோம். இருந்தும் அம்முறை மாற்றப்படவில்லை எனவே, அகம் களிக்கும் இந்த நேரத்தில், ஆளவந்தாருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறோம்—போர்டுகளை மாற்றி, தமிழில் பெயர்கள் தலைப்பில் பொறிக்கப்படவேண்டும் என்பதாக. இந்தி கட்டாயமாக்கப்பட்ட போதும், 'வேண்டாம்' என்று அன்போடுதான் சொன்னோம். கேட்கவில்லை! தொல்லையை வளர்த்துக்கொண்டு—இப்போது பணிந்திருக்கின்றனர்! அதுபோலவே, இப்போதும் அன்போடு வேண்டுகிறோம், 'தாய்மொழியைத் தாழ்த்தவேண்டாம்! தமிழர் இதயங்களைப் புண்படுத்த வேண்டாம்' என்று. நமது வேண்டுகோளுக்கு, முன்னர் போல இல்லாமல், இப்போது சர்க்கார் இணங்கும்—அதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமென்று எதிர்பார்க்கிறோம்.

'இல்லை! முடியாது! நேரமில்லை!' என்று சர்க்கார் சொல்லுமேயானால், சர்க்காருக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தயவுசெய்து, அதற்கான அனுமதியைத் தந்துவிட்டும்—நாம், தார் தொட்டி ஒரு கையிலும் பிரஷ் இன்னொரு கையிலுமாக எடுத்துக்கொண்டு கிளம்புவோம்–நாமே பெயர்களை மாற்றி எழுதுவோம்!" என்று, கடைசியாகக் குறிப்பிட்டார்.

(நிருபர்)

✓ (முன் பக்கத் தொடர்ச்சி)

இந்தி கட்டாய பாடமாக்கப் பட்டபோதும்- உதாசீனம் செய்யாதீர், தாய் மொழியை என்று உள்ளன்போடுதான் தெரிவித்தோம் — ஆனால் வீம்பை மனதில் வைத்து வெறுப்பை, விளைக்கு வாங்கினர்.

அந்தச் சூழ்நிலை மீண்டும் உதயமாக வேண்டாம்—இப்போது நிலைமையை உணர்ந்திருக்கிறீர்கள். தாய்மொழிக்குச் செய்த துரோகத்தை துடைத்துக் கொண்டிருக்கிறீர்கள்!

ஆகவே, எங்கள் கோரிக்கைக்காகச் சிந்தனையைச் சிறிது செலவிடுங்கள்.

தாய் மொழியைத் தாழ்த்த நினைக்கும் தருக்கு மிக்க செயல்களை வீழ்த்துங்கள்—அகற்றுங்கள்!

இன்றேல், வெற்றி பெற்றுத் திளைத்து நிற்கும் தமிழகக் காளைகளின் 'அடுத்த போர்' ஆரம்பமாகி விடும். மிரட்டுவதல்ல, இது! மிரட்டியோ அல்லது அதிருப்தியைத் திரட்டியோ உங்கள் ஆட்சியைக் கவிழ்க்கும்—சூதுமதியினரல்ல. நாங்கள்! உரிமைக்காக, தாய்மொழியின் உயர்வுக்காகப் போராடும் வீரர்கள்! எனவே, அதிருப்திப் போர் ஆரம்பமாவதற்குள், ரயில்வே நிலயங்களின் போர்டுகளின் தலைப்பில் தாய் மொழி இடம் பெற வழி செய்யுங்கள்—

தாய் மொழிமீது வீசப்படும் இழிவு ஈட்டியைத் தடுத்து எறியுங்கள்!! இன்றேல் வெற்றிப் படையின் வீரமுழக்கம் அடுத்த அறப்போராக உருவெடுக்கத் தயாராக இருக்கிறது. உணர்ந்து கொள்ளுங்கள்!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மந்திரிமார்களின் இஷ்டமே இந்நாட்டின் சட்டமாயிற்று.

எண்ணத்தில் எதுபட்டாலும் அதுவே திட்டமாயிற்று.

எப்படி யெப்படி விரும்புகிறார்களோ அது போலவே நடக்கவிரும்பினர்.

விளைவு, புதுப்புது உத்திரவுகள் புற்றீசல் போலப் புறப்பட்டன — அமைச்சர்களின் அதிகாரம் தாங்கிய பேனமுனைகளிலிருந்து.

இந்த உத்திரவுகள் பிறப்பிக்கப்படுமுன், அது சம்பந்தமான அதிகாரிகளையோ அல்லது அது குறித்து விஷயம் புரிந்த அறிஞர்களையோ கலந்தாலோசிப்பது தங்கள் கௌரத்துக்குப்பங்கமான காரியம் — என்று கருதினர். ஆனால், இப்போது அமைச்சர் மாதவமேனனார் கூறுகிறார்,

விஷயமறிந்தோரின் கருத்து
நிபுணர்களின் அபிப்பிராயம்
நிர்வாக அதிகாரிகளின் எண்ணம்.

ஆகியவைகளைத் தெரிந்துகொண்டு, சட்டங்களை இயற்றுவதே ஜனநாயகமான காரியம் என்பதாக.

X X X

இந்தி கட்டாயம் என்று புகுத்தப்பட்டபோது 'கூடாது இது'என்று கூறினர் பேராசிரியர்கள். மாணவர்களோடு தினம் பழகியுலாவும் பள்ளியாசிரியர்கள் கண்டித்தனர். தமிழ்க் கடல் மறைமலையடிகள், தமிழ்ப்பெரியார் திரு. வி. க, நாவலர் பாரதியார், பாவலர்பாரதிதாசனபோன்ற தமிழ்ப்புலவர்கள் எச்சரித்தனர்!

காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த சிவஞானகிராமணி, நாரணதுரைக்கண்ணன் போன்றோரும் நல்லதல்லவென்று கூறினர்.

தமிழ் ஆசிரியர்களும், தமிழ் மாணவர்களும் 'தகாது, இத் திட்டம்' என்று, வேதனையை வெளியிட்டனர்.

'தமிழ் மணி', 'சிவாஜி', 'பிரசண்ட விகடன்' போன்ற தேசிய இதழ்களும் கண்டித்தன.

பொதுமக்களும் குமுறினர்—இதை யெல்லாம் நாம் உருவாக்கிக் காட்டினோம்!

"குழந்தைகள் இதயம் கோணிப் பையல்ல, திணிக்கத் திணிக்கக் கொள்வதற்கு! அது, இளம் பிஞ்சு! பிஞ்சு, காயாகுமுன் வெம்பச் செய்து விடாதீர்கள்"—என்றுஉதாரணங் காட்டி, வேண்டினோம்.

"தாய் மொழி கற்கவே தவிக்கிறார்கள் குழந்தைகள். இந்நிலையில் வேண்டாத மொழியை கட்டாயப்படுத்தாதீர்கள். அளவுக்கு மீறினால் அமுதமும் விஷமாகும்"—என்று, எச்சரித்தோம்.

ஆனால், இவையெல்லாம் புறக்கணிக்கப்பட்டன.

இந்தி கட்டாய பாடம்தான் என்று—நிமிடநேரத்தில் அமைச்சரின் பேனா உத்திரவைக் கிறுக்கித் தள்ளியது.

பொதுமக்களின் அபிப்பிராயம்.
அறிஞர்களின் கருத்து.
ஆசிரியர்களின் எச்சரிக்கை.

எல்லாம் அலட்சியப்படுத்தப்பட்டது.

நமது எதிர்ப்பையும், கண்டனத்தையும் கண்ட மந்திரிமார்கள் ஏளனம் செய்தனர்—இழித்துப் பேசினர். தடியடி, சிறைச்சாலை, எல்லாம் வழங்கப்பட்டது. நமது தோழர்களின் இரத்தத்தை, போலீசாரின்குண்டாந்தடிகள்பூசிக் கொண்டன! இத்தனை அடக்குமுறைகளை வீசியும், காட்டுமிராண்டித்தனத்தில் ஈடுபட்டும் மக்களின் கிளர்ச்சியை அடக்க முனைந்தனர்—போட்ட உத்திரவை மாற்றுவதா என்ற வீம்பு காரணமாக.

இப்போதோ, உத்திரவு, மாற்றவேண்டிய சூழ்நிலை பிறந்ததும் சோகமுடன் சொல்கிறார் கல்வியமைச்சர், 'நான் கல்வி மந்திரியே யொழிய நிபுணனல்ல! எந்த உத்திரவையும் நிறைவேற்றுமுன் விஷயமறிந்தோர் விருப்பம், அதிகாரிகள் கருத்து, பொதுமக்கள் மனநிலை ஆகியவை' கவனிக்கப்பட வேண்டும் என்பதாக.

"தனது தாய் மொழியைப் புரிந்துகொள்வதிலும், அதை உபயோகிப்பதிலும் ஒவ்வொரு குழந்தையும் தனது திறமையை அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டும்."

"நடக்கத் தெரிந்த குழந்தை தானாக ஓடும். பிற்பாடு வேண்டுமானால் தலைகீழாக நிற்பதற்குஅது கற்றுக் கொள்ளலாம். ஆகவே, எந்தக்குழந்தையும் தாய்மொழியில் போதுமான திறமை பெறவேண்டும்"

கூறுவது நாமல்ல! இந்தி கட்டாயம்தான் என்று உத்திரவு பிறப்பித்து இன்று 'இல்லை' யென்று வெளியிட்டிருக்கும் கல்வி யமைச்சர்தான்!!

தாய் மொழியைக் கற்பதே இளம் குழந்தைகளுக்கு முக்கியம்.

இளம் இதயங்களில் அதிக மொழிகளைத் திணிக்கக்கூடாது!

—அன்று நாம் இப்படிச் சான்னோம்!

—இன்று அதையே 'இந்தி கட்டாயமில்லை' என்று உத்திரவு பிறப்பிப்பதற்குக் காரணமாகக் காட்டுகிறார் கல்வி யமைச்சர்!

அன்று கூறியது நாம்; இன்று கூறுவது அவர். இதைத் தவிர, இந்தி கூடாது' என்பதற்கு நாமும், நல்லறிவாளர்களும் காட்டிய காரணமும், இன்று அமைச்சர் கூறும் காரணமும் ஒன்றுதான்!

இருந்தும், வீம்பு காரணமாக விவேகபுரிநோக்கி நடக்க மறுத்தனர்—மண்டைகளையுடைத்தனர்! சிறையிலே போட்டு பூட்டினர்! சிங்கங்கள் போலப் பாய்ந்தனர் நம் போன்றார் மீது!

ஆனால், இன்று, நாம் அன்று கூறிய காரணத்தைக் காட்டியே 'கட்டாய இந்தி இல்லை' என்று, கட்டளை பிறப்பித்திருக்கின்றனர்—விஷயமறிந்தோர் விருப்பு, அதிகாரிகள் கருத்து, நிபுணர்கள் அபிப்பிராயம் ஆகியவைகளின் மீதே எந்தப்பிரச்னையும் கவனிக்கப்பட வேண்டுமென்பதாகக்கூறிக்கொண்டு.

* * *

தூற்றல் துந்துபி முழக்கித் திரிந்த மலையாள மாதவனார் துணிச்சலோடு இன்று, இக்கருத்துக்களை வெளியிட்டது காண மகிழ்கிறோம்—அவரும் ஒரு அமைச்சர், ஆகவே ஏனைய அமைச்சர்களும் இதே வழியைத் தான் பின் பற்றுவர் என்ற நம்பிக்கை உதயமாவதால்.

'எல்லாம் தெரியும்' என்ற பெருமிதப் போக்கால், நாட்டிலே விளைந்த அனர்த்தங்கள் அதிகம் உண்டு, இவர்கள் ஆட்சியில்.

அதிகாரம் கையிலிருக்கிறது—கேட்க நாதியார்? என்ற துணிச்சலால், இஷ்டம் போல் கட்டளைகளைப் பிறப்பித்து, கலக்கிவிட்டனர், நாட்டு மக்களை.

கற்றறிந்த நிபுணர்களின் யோசனைகளையும், நம் போன்றாரின் கண்டனங்களையும் கால் தூசு என மதித்தனர்—கண்ணியத்தை இழந்தனர். இன்று மீண்டும் கண்ணொளி பெற்றார் போல, உண்மைகளை ஒப்புகின்றனர்.

அமைச்சர் மாதவ மேனன் கூறுவதுபோல, மந்திரிகளாக வருவோர் முற்றுமுணர்ந்த முழுமதியாளர்களாகத் தான் இருக்கவேண்டும் என்பதில்லை! ஆனால் முரட்டுப் போக்கு நிறைந்தவர்களாக இருக்கக் கூடாது!

தவறு எல்லோருக்கும் சகஜம் — ஆனால், அது தவறு என்பதை உணர்ந்தோர் இடித்துக் காட்டும் போது ஏற்றுக்கொள்வதுதான் நல்லாட்சியின் இலக்கணம்.

ஆனால் இந்த இலக்கணம் — இவர்கள் ஆட்சியில் 'தேச நாச'மாக் கருதப்படுகிறது.

ஜனநாயக ஆட்சியில், எதிர்க்கட்சிகளாக யிருப்பவர்களோ அல்லது கட்சி சார்பற்ற அறிஞர்களோ—சர்க்காரின் போக்கு குறித்து சுட்டிக் காட்டினால் அதையேற்று நடப்பதுதான் நல்லது; நாட்டுக்கும், ஆட்சியாளருக்கும்!

ஆனால் இந்த அகராதி இவர்கள் ஆட்சியில் அஸ்தமித்து விட்டது.

அதற்கான வகையில், இவர்களுடைய சூழ்நிலையும் அமைந்து விட்டது.

ஆட்சிப்பீட மேறியோர், கொண்டுவரும் திட்டங்கள் குறித்து மக்களின் கருத்தலைகளைப்பிரதிபலிப்பது பத்திரிகைகளின் கடமையாகும்—அடுத்தபடி, அந்தந்தத் துறையில் அனுபவமிக்க வல்லுநர்களின் பொறுப்பாகும்

ஆனால் துரதிர்ஷ்ட வசமாக இந்நாட்டின் பத்திரிகைகளோ ஆளவந்தாரின் எடுபிடிகளாகவும், எதிரொலியாகவுமே இருக்கின்றன.

தவறோ அல்லது சரியோ எந்தத் திட்டம் காங்கிரஸ் ஆட்சியில கொண்டு வரப்பட்டாலும் அதை ஆதரிப்பது தான், தேச பக்தி' என்ற தப்புக் குழியில் வீழ்ந்து கிடக்கின்றன இதன் விளைவாக, எத்திட்டம் கொண்டு வரப்பட்டாலும் அவைகளுக்கு ஆதாரங்களைத் தேடித் திரட்டி, காங்கிரஸ் மந்திரிகள் செய்வது நல்ல காரியம், என்பதற்கான விளக்கம், அதற்கான விரிவுரைகளைப் பரப்புவதே திருத்தொண்டெனக் கருதிக் கிடக்கின்றன.

ஆளவந்தார் வழி தவறினால் கூட—அதை எடுத்துக்காட்டாமல், அதை ஆதரிப்பதே தங்களின் கடமை யென்று எண்ணிக்கொண்டு ஆதரிக்கின்றன.

நாட்டின் நன்மை நாடும் நிபுணர்களின் நிலையோ பரிதாபம் நிரம்பியதாக இருக்கிறது—முக்கியப் பிரச்னைகள் குறித்துத் தங்களது கருத்தைத் தெரிவிக்க வாய்ப்பும் வசதியும் ஏற்

(7-ம் பக்கம் பார்க்க)

பள்ளியில்

சார்!

ஏண்டா?

உங்க வாக்குப் பலிக்கலியே!

என்னடா சொல்றே?

சொன்னீங்களே முன்னே — கட்டாய இந்தியை எடுக்கவே மாட்டாங்க......சர்க்காரு, உத்தரவு மாறுது......அப்படி இப்படின்னு......

சரி, சரி, பேசாம, பாடம்படி.

கட்டாய இந்தி ஒழிந்து போயிடுத்தே, சார்!

தெரியும், சும்மா இரு.

போலீஸ் ஸ்டேஷனில்!

வீண்வேலை, சார்! அனாவசியமான தொல்லை.

என்ன, 76, சலிப்பு?

சலிப்பு வராமலிருக்குமா, சார்! என்னமோ புயல் காத்து அடிச்சாக்கூட அசையப்போறதில்லைன்னு சொன்னாங்க.

யாரு? எதுக்கு?

மந்திரிங்க—இந்தி விஷயமா!

ஆமாம்.........

இந்தி எதிர்ப்புக்காரனுங்களைத் துரத்தி அடிக்கச் சொன்னாங்க—கடைசியிலே இப்ப, கட்டாய இந்தி கிடையாதுன்னு மந்திரியே சொல்லி விட்டாராமே.

ஆமாமாம்!

இதுக்கு ஏன் சார், வீணாகவே — நமக்கு வீண்வேலை—ஆரம்பத்திலேயே அந்தச் சனியனை தொலைச்சிருக்கக் கூடாதா? ஒரு வருஷமா இந்தி எதிர்ப்புக்காரனுங்களோடே மல்லுக்கு நில்லுன்னு சொல்லிவிட்டு, இப்ப, இந்தி கட்டாயமில்லைன்னு ஒரு வரியிலே எழுதி விட்டார்—என்ன போங்க சார்—உத்தரவு போடற போதே நிலைக்குமான்னு பார்த்துப் போட்டா நமக்கும் வீண்வேலை ஏற்படாது—ஊராருக்கும் தொல்லை இருக்காது.

சரி, சரி, உன் வேலையைக் கவனி......

கவனிக்கிறேன், சார்! இப்ப, இந்தி எதிர்ப்புக்காரனுங்களைப் பார்க்கணும்னா ஒரு மாதிரியா இருக்கே! பயலுக பார்வையே, "ஏம்பா! கான்ஸ்டபிள்! இந்தி ஒழிந்து போச்சு தெரியுமா?"ன்னு கேட்கிறது போலிருக்கு.

பத்திரிகை ஆபிஸில்

சேச்சேசே! இப்படியா ஒருபல்டி அடிப்பது? ஓரேவரியிலே நம்ம ஒருவருஷ எழுத்தையும் அழித்துவிடுவதா...........

என்ன மிஸ்டர் கோபம்...........?

வெளியிலே சொன்னா, வெட்கக்கேடு சார்! எவ்வளவு காரசாரமாக்கண்டித்தோம்—என்னென்ன காரணம் காட்டி, கட்டாய இந்தியை வலியுறுத்தினோம் — இந்தி எதிர்ப்புக்காரன்களை எவ்வளவு கேவலப்படுத்தினோம்.....

அது சரி.....நம்ம சர்க்காரை நாம் ஆதரிக்க வேண்டியதுதானே முறை.

அது சரி, சார்! இப்படி நம்மை வேலைசெய்ய விட்டுவிட்டு, திடீர்னு, நம்ம முகத்திலே கரி பூசறதுபோல, கட்டாய இந்தி இனி இல்லைன்னு மந்திரி உத்தரவு போடறது........இதுவரை நாம் எழுதினது அவ்வளவும் குப்பைகூளம்தானா! நம்மைப்பத்தி, பொதுமக்கள் என்ன எண்ணுவா?

நாம் என்ன சார், செய்யலாம்.

அதுதான் எனக்கும் தெரியலே! நம்ம சர்க்கார்னு எண்ணிக்கொண்டு நாம் அவர்கள் செய்வதை எல்லாம் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்கிறோம்—கடைசியிலே, நம்ம 'மானம்' கப்பல் ஏறிவிடும்போலிருக்கே. இப்ப யார் சர்க்கார் நடக்குதுன்னு தெரியலியே! நம்ம சர்க்காரா—அவர்கள் சர்க்காரா?

2-ம் பக்கத் தொடர்ச்சி

ஒழிக்க விவசாய கருத்துடன் ஆராய்ந்து வருகின்றனர் ஆட்சியாளர் அக்கரை காட்டுகின்றனர், என்ற எண்ணம் வந்து பதிவதற்குள், எட்டு, ஏழு ஆறு என்ற அவுன்ஸ் கணக்கு புகையோடிப் போன நினைவு வந்து குறுக்கிடுகிறது.

திருவாங்கூரில் நெல் சாகுபடியை அபிவிருத்தி செய்வதற்காக இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகத்தின் பண உதவி பெற்று பத்தாண்டுகளாகச் செய்த ஆராய்ச்சி முடிவுகளைக்காணக் களிப்பு வருகிறது. அரிசிக்கு வரும் மக்கள் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு இச்செய்தியைப் படிப்பர். பிறகு ஆட்சியாளரின் அக்கரையற்ற தன்மையைக் கண்டு பதைப்பர்.

அரிசியியல் தரும் அடுக்கடுக்கான செய்திகளை நாம் நாளும் பார்க்கிறோம். அங்கே அரிசியைக் கடத்தினான், இங்கே அரிசியைத் திருட்டுத்தனமாகப் பதுக்கிவைத்தான், ரேஷன் கார்டுகள் பல் பொய்யாக உண்டாக்கி அரிசி அதிகம் வாங்கினான்......என்றெல்லாம் படிக்கிறோம். கோளப் பகுதியில் 7 கோடி ரூபாய் செலவில் உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டம் வேலை செய்யப் போகிறது என்பதையும் படிக்கிறோம். இரண்டையும் சேர்த்துப் பார்க்கிறபொழுது சிரிப்பதா, அழுவதா என்று புரியவில்லை. திட்டம் இருக்கிறது, எனினும் வாட்டம் வளர்கிறது. ஏன்? இக்கேள்வி எழுப்பினால் காய்கறித் தோட்டத்தைக் காட்டிவிடுகிறார் கனம்—கனிக் காட்டிற்குச் செல் என்று கட்டளை பிறப்பித்து விடுகிறார் மந்திரி!

உணவு நிலைமை இப்படிப் பிண வீடாகக் காட்சியளிக்கிறது. அந்தப் பகுதியைக் கவனிக்கும் கனம் முன்ஷியாரோ பம்பாயில் தங்கி, பாழ்பட்டுப்போன சோமநாதர் ஆலயத்தைத் திருப்பித் திருத்திப் புதுப்பிக்க, சிற்பிகளோடு பேச்சு வார்த்தை நடத்தினர் என்று செய்தி வருகிறது.

முன்ஷி மார்க்கம் விரிந்துகொண்டே போகிறது. விபரீதத்தை வளர்த்துக்கொண்டே இருக்கிறது.

கோயில் திருப்பணி
சிற்ப ஆராய்ச்சி

இவைகளையும் பழைய மார்க்கத் திட்டப் பட்டியலோடு இணைத்துப் படியுங்கள்.

முன்ஷி முனிவராகிறார்—இடிந்த கோயில், உடைந்த சிலை, தூர்ந்துபோன குளம் இப்படிப் புதுத் திருப்பணி வேறு ஆரம்பித்துவிட்டார். இடிந்த இதயத்துடன், பசி போக்க புசிக்க உணவு கிடைக்கவில்லையே என்று வாடிடும் உயிருள்ள 'சிலைகளை'ப் பற்றி எண்ணவில்லை!

இத்தனை திருவிளையாடல்களையும் பார்க்கிறோம் நாம். நம்மிடமே சொல்கிறார், மந்திரிகள் என்றால் ஒன்றும் தெரியாதவர்கள் என்று மக்கள் நினைக்கின்றனர், இது மன்னிக்க முடியாத தவறு, மந்திரிகள் எல்லாம் உணர்ந்தவர்கள், எதைப் பற்றியும் அறிந்தவர்கள், அவர்கள் நிபுணர்கள், சகலத்தையும் தெரிந்த வித்தகர்கள் என்று!

X X X

முன்ஷியார் மந்திரியான பிறகு, மகானாகிறார்—பக்தர்களுக்கு எட்டாத திட்டங்களைத் தீட்டிக் காட்டுகிறார்! மார்க்க ஸ்தாபகராகிறார்—உணவில்லாத துக்கத்தை தூர்க்க வழி காட்டவில்லை!

முன்ஷி மார்க்கம் — சாதித்துவிடத் துடிப்பவை—அந்த வாழ்க்கைக்கு ஒட்டிவாராத பிரச்சினைகள்—நம்மைத் திகைக்க வைக்கின்றன.

நாட்டைக் காடாக்கி விடவேண்டும் நாட்டு மக்கள் விலங்கினங்கள் போலக் காய்கறிகளைத் தின்னவேண்டும். குரங்குகளை அழிக்கவேண்டும். இப்படி எல்லாவற்றையும் இணைத்துப் படித்துப் பார்த்தால், டார்வின் ஆராய்ச்சியை திருப்பி நடத்தப்போட்டிருக்கும் புதுத் திட்டமோ, இந்த முன்ஷி மார்க்கம் என்று கூட நினைக்கத் தோன்றுகிறது—அந்த நினைவு சிரிப்பை இழுக்கிறது முதலில், சிந்தனையைக் கிளறுகிறது பிறகு, சீற்றத்தைத் தட்டி விடுகிறது இறுதியில்!

✻



படிப்பகம்

பேச்சுக் கலை விலை ரூ 1.

நா—உலகை யாள்கிறது — பேனா உலகை ஆட்டுவிக்கிறது! ஆம், நாவின் நர்த்தனத்தைப் பற்றிய அரிய ஆராய்ச்சி — கே. வி. வீரராகவன், பி. ஏ., பி. எல்., அன்புப் பழம் நீ ஆகியோரின் முயற்சி இந்நூல். பெறும் இடம்—தமிழ்ப் புத்தகாலயம், மயிலாப்பூர், சென்னை—4.

தோழமையா? விரோதமா? விலை 4 அணா

நூல் நிலையங்கள் விலை 3 அணா

கல்வியும் அரசாங்கமும் விலை 2 அணா

பெறும் இடம்:— மறுமலர்ச்சி நூல் நிலையம், ஆயலூர் முத்தையா முதலித் தெரு, சென்னை-1.

சமுதாயப் புரட்சி விலை 4 அணா

பெறும் இடம்:— பகுத்தறிவுப் பாசறை, 147 பவழக்காரத் தெரு, சென்னை—1.

இவை, அண்ணாதுரை, பல இடங்களில், ஆற்றிய சொற்பொழிவைத் தாங்கியவை.

முத்தமிழ் விலை 6 அணா

கோவை முத்தமிழ் மாநாட்டில் எஸ். எஸ். பாரதியார், பாரதிதாசன், அண்ணாதுரை ஆகியோர் நிகழ்த்திய சொற்பொழிவுகளின் தொகுப்பு.

பெறும் இடம்:— மறுமலர்ச்சி நூல் நிலையம்—சென்னை—1.

புரட்சிப் பாடல்கள் விலை 1½ அணா

இசைச் செல்வன் 'கோரா', திரைப் படங்கள் மூலம் புகழ் படைத்த மெட்டுகளில் அமைத்துள்ள பாடல்கள் — மேடைப் பாடகர்களுக்கு ஏற்ற இசைஏடு.

பெறும் இடம்:— அஜீஸ் பதிப்பகம், விஜயபுரம், திருவாரூர்.

மதப் புரட்சி

'மார்க்ஸிம் மியாவ்ஸ்கி' தீட்டிய சிறு ஏடு.

பெறும் இடம்:— புதுமைச் சிற்பி பிரசுரம், 15, பந்தடி 7—மதுரை.

புதிய பாதை

மதுரை மாவட்ட, சென்னை அரசாங்க அலுவலர் சங்கம் மேலூர் கிளை வெளியீடு.

வரப் பெற்றோம்.

குறள் மலர்

வள்ளுவர் குறளைப் பரப்பும் வார வெளியீடு. ஆசிரியர், திருக்குறள் — முனுசாமி. தனி பிரதி 2 அணா.

கிண்கிணி

குழந்தைகள் பத்திரிகை. ஆசிரியர் "வாண்டு மாமா"—தனி பிரதி 2½ அணா.

முஸ்லீம் முரசு

இத்திங்கள் ஈத் மலர்—விலை 8 அணா.

தேன் கூடு

மதுரையிலிருந்து, இளந் தோழர்கள் கு. ப. ம. தர்மன், பி. காம். மு. இராசகோபாலன், பி. ஏ. மி. தங்கராஜ் பி. ஏ, க. இரா. சத்தியேந்திரன் பி. ஏ., பி. எல்., கட்டி முடித்துத் தரும் மாதக் கூடு—நம் இயக்க ரீங்காரம் பாடும் ஏடு. தனி பிரதி 2 அணா.

ஆராய்ச்சி மணி

திருச்சியிலிருந்து கேட்கிறது இந்த மணி யோசை—மாத மிரு முறை. தனி பிரதி 3 அணா.

காந்தம்

வாழ்வின் பல பகுதிகளையும் — அரசியல், பொருளியல், சமூகம், இலக்கியம்.........தாங்கி வரும் மாத ஏடு. தனி பிரதி 4 அணா.

தூண்டுகோல்

சென்னையிலிருந்து, இளமாறனை ஆசிரியராகக் கொண்டுவரும் வார வெளியீடு. தனி பிரதி 1 அணா.

சங்குநாதம்

சிவகங்கையிலிருந்து, நம் இயக்க இலட்சியங்களை, அடிப்படை எண்ணங்களை எடுத்து முழங்கிடும் சங்குநாதம் வார இதழ். தனி பிரதி 1½ அணா.

6-ம் பக்கத் தொடர்ச்சி

படுவதே துர்லபமாகயிருக்கிறது. தேசிய ஏடுகள்—அவர்களின் கருத்துரைகளுக்கு மதிப்புத் தருவதில்லை, மறைத்து விடுகின்றன. அப்படியும் மீறி எப்படியாவது, அமைச்சர்களின் காதை எட்டினாலும், அவர்கள் யோசனைகள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. அதற்குப் பதிலாக தங்கள் திட்டத்தைப் போற்றித் துதி பாடுவோருக்கே சலுகையும் சந்தர்ப்பமும் தருகின்றனர் ஆளவந்தார். ஆகவே, நடு நிலைமையிலிருந்து நாட்டு நன்மைக்கான யோசனைகளைக் கூறுவோரின் அறிவுரைகள் வீணாகி விடுகின்றன.

இதன் விளைவாக, மந்திரிமார்களின் எதேச்சாதிகாரப் போக்கு நீடிப்பதற்கான சூழ்நிலை வளர்ந்திருக்கிறது, நாட்டில்.

தேசிய ஏடுகளின் சுயநலம்
நிபுணர்களின் நிராதரவான நிலை

இரண்டையும் மீறி, பொது மக்களின் கருத்தையும் நாட்டுக்கு நன்மை பயக்கும் யோசனைகளையும் கூறும் நிலையில் திராவிடரியக்கத்தினராகிய நாமும், நமது ஏடுகளுந்தான் உள்ளன.

அரசியலை ஆதிக்க வேட்டைக் காடாக நினைப்பவர்களல்ல நாம்—ஏதாவது மக்களுக்கு இனிக்கும்படியாகப் பேசி 'வோட்' பெறவேண்டிய ஆசையோ அவசியமோ இல்லாதவர்கள். நாட்டின் எதிர்காலம், சமுதாய நல்வாழ்வு ஆகியவைகளே நமது குறிக்கோள். இதன் காரணமாகவே, எதற்கும் அஞ்சாது, எது சரியெனப் படுகிறதோ, அதற்காகப் போராடுகிறோம் — இன்னல்கள் வந்தாலும் அவைகளைப் புன் சிரிப்பால் மறைத்துக் கொண்டு.

ஆனால்—ஆட்சிப் பீடமேறியோருக்கு நம்மைக் கண்டால் அச்சமும், பயமும் உருவாகிக் கிடக்கிறதே யொழிய, நம்மைப் பற்றித் தெரிந்துகொள்ளுமளவுக்குச் சிந்தனை தெளிவில்லை.

எது கூறினாலும்—சூழ்ச்சியோ எனச் சந்தேகிக்கின்றனர். சூதுத் திட்டம் இருக்குமோ என்று சஞ்சலப்படுகின்றனர்.

'இதுகள் சொல்லவாவது—அதையேற்று நாம் நடப்பதாவது' என்று வீம்புக்கு இரையாகின்றனர். இதன் காரணமாகவே, இந்தி கட்டாயம் என்று கூறப்பட்ட பொழுது நாம் 'வேண்டாம் இந்த வீண்வேலை' என்று வேண்டினோம்.

நமது வேண்டுகோளை வீண் கூச்சலென்று நிராகரித்தனர்.

எச்சரித்தோம்—அது மிரட்டலாகக் கருதப்பட்டது. அறப்போர் துவக்கினோம்—கேலி பேசினர்!

ஆனால், இன்றோ? அன்று நாம் மேற்கொண்ட நடவடிக்கைகள் வெற்றிபெற்று விட்டன. நாம் கூறியது உண்மையென்று புலனாகிவிட்டது. வீம்புக்கு இரையாவது விபரீத விளையாட்டு—என்று ஆளவந்தாருக்கு விளங்கிவிட்டது.

அன்று கட்டாய இந்தி கூடாது என்று சொன்னோம் — இன்று அது நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அன்று நமது முழக்கம் எழும்பியபோது தேசிய ஏடுகள் வழக்கம்போல 'தெந்தினம்' பாடின—நம்மைக் கிண்டல் செய்தன! இந்தியைக் கட்டாய பாடமாக்காதீர் என்று தமிழறிஞர்கள் விடுத்த வேண்டுகோட்களைப் புறக்கணித்தன—பிரசுரிக்கவில்லை!

ஆனால், உதாசீனம் செய்தோராலேயே நமது அறப்போரின் விளைவுகள் குறித்து இப்போது சிந்திக்கப்படுகின்றன.

இந்த சூழ்நிலையை எடுத்துக்காட்டுவதுதான் மாதவமேனனார் வெளியிட்டிருக்கும் வாசகங்கள்.

பொதுஜனக் கருத்தையும், அறிஞர்கள் எண்ணத்தையும் தெரிந்துகொண்டு நடைபெறுவதுதான் நல்லாட்சியாகும்.

ஆனால் பொதுமக்கள் கருத்தையும் அறிஞர்கள் விருப்பத்தையும் தெரிவித்து நாட்டு நலனுக்காகப் போராடிய நம்மீது, அடக்குமுறைப் பாணங்களை, வீசினர். 'ஏடு - ஜாமீன்!' என்று நமது பத்திரிகைகளைக் கேட்டனர். பல நூல்களைத் தடை செய்தனர்.

இந்த நடவடிக்கைகள் யாவும் வீம்பின் விளைவுகள்—என்பதை, சர்க்கார் நமது கோரிக்கைக்கு தலை சாய்த்ததும், அது குறித்து கல்வியமைச்சர் வெளியிட்ட விளக்கமும் விளக்குகின்றன.

எனவே, இந்நிகழ்ச்சியாவது எதேச்சாதிகாரப் பாதையில் நடக்கும் காங்கிரஸ் ஆள[illegible]ருக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கட்டும். [illegible]மையைப் பெரிதென நினைத்து, வீண் தொல்[illegible] நாட்டில் சிருஷ்டிக்காது நடந்துகொள்ள[illegible]

✻

புதுக் கழகங்கள்

காட்பாடி:

23—7—50 அன்று தோழர் இரா. இலக்குவன் தலைமையில் திராவிட முன்னேற்றக்கழகக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் அப்பாதுரை செயலாளராகவும், வி. ஏ. பசூல் துணைச்செயலாளராகவும், ச. சு. மணி பொருளாளராகவும், ஏ. டி. ராச விளம்பர உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். தோழர்கள் இருதயநாதன், சம்பத், துரை, பாலகிருட்டினன், கேசவன், இலக்குவன், சிவபாதம், சுந்தர் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்கள்.

மீனாட்சிபுரம்

23-7—50 திராவிட முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் தோழர் எஸ். வி சக்கரை இல்லத்தில் தோழர் எஸ். ஏ. ராஜன் தலைமையில் நடைபெற்றபோது செயலாளராக தோழர் எஸ், ஏ. சர்க்கரை துணைச்செயலாளராக தோழர் கே. எஸ். ஆர். சந்திரன், பொருளாளராக, தோழர் பாட்சா, விளம்பர உறுப்பினராக தோழர் அமீர் ஆகியோர் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

"ஆரியமாயை" வழக்கு!

ஆட்சியாளரால், 'ஆரியமாயை' என்ற நூலை தீட்டியமைக்காகவும் அதைப் பிரசுரித்தமைக்காகவும் சி. என். ஏ. மீதும் 'திராவிடப் பண்ணை' முத்துக்கிருஷ்ணன், கண்ணப்பன் ஆகியோர் மீதும் தொடரப்பட்டுள்ள வழக்கு முன்பு குறிப்பிட்டபடி 24—7 50 அன்று திருச்சி சப்டிவிஷனல் மாஜிஸ்டிரேட் முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, 5—8—40-க்கு வழக்கம் போல ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது!

பொன்மலை—கழக வழக்கு

பொன்மலை திராவிட வாலிபர்கழக தோட்டத்தையும், பணத்தையும் கைப்பற்ற சிலர் கொடுத்த தொல்லைகளின் காரணமாக பொன்மலை போலீசார் இ. பி. கோ. 145 சட்டப்படி திருச்சி சப்டிவிஷனல் மாஜிஸ்ரேட் கோர்ட்டில் வழக்கு தொடுத்து இருக்கிறார்கள். மேற்படி வழக்கு இதுவரையில், மூன்று முறை ஒத்திப்போடப்பட்டு 1—7—50-ல் மேற்படி கோர்ட்டில் நடக்கவிருக்கிறது என்று கழகச்செயலாளர் தோழர் A. கோவிந்தசாமி தெரிவிக்கிறார்.

நெல்லை மாவட்ட மாநாடு

நெல்லை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதலாவது மாநாடு வரும் ஆகஸ்டு மாதம் 26, 27 (சனி, ஞாயிறு) தேதிகளில் வேல்—வெள்ளைச்சாமி பந்தலில் நடைபெறும்.

தலைவர்: மு. கருணாநிதி

திறப்பாளர்: டி. கே. சீனிவாசன்.

பொதுச் செயலாளர் சி. என். அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், க. அன்பழகன், என். வி. நடராஜன், இரெ. இளம்வழுதி, கே. ஏ. மதியழகன், ஈ. வி. கே. சம்பத், அரங்கண்ணல் ஆகியோரும் மற்றும் பலரும் கலந்துகொள்வர்.

மாநாட்டில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனும் பங்கு கொள்வார்.

சி. என். ஏ—நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி ஆகியோர் நடிக்கும் 'சந்திரமோகன்' நாடகமும் நடைபெறும்.

மாநாட்டுக் கட்டணம், இரண்டு நாள் உணவுடன் சேர்த்து:-

வரவேற்பாளர் ரூ 5.

பிரதிநிதி ரூ 4.

பார்வையாளர் ரூ. 1 (உணவு கிடையாது)

W. D. துரைசாமி ஈ. வே. அ. வள்ளிமுத்து
செயலாளர். வரவேற்புக் குழு தலைவர்.

பாலகிருட்டினன்
தொ. படை தலைவர்.

நடக்க இருப்பது

திருச்செங்கோடு:

30—7—50 ஞாயறன்று மாலை நாற்பதுகால் மண்டபத்தின்முன் களிப்புக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் மு. கருணாநிதி, இராம. அரங்கண்ணல் ஆகியோர் பேசுவர்.

சுழல் விளக்கு

யுத்தம்-சமாதானம்

கொரியாப் போர்ச் செய்திகளை அன்றாடம் மக்கள் படிக்கத் துடிப்பதுபோலவே, அதனை நிறுத்தச் செய்யும் முயற்சிகளையும் ஆவலோடு படிக்கின்றனர். வட கொரியர் ஒவ்வொரு நாளும் முன்னேறிக்கொண்டே வருகின்றனர். பூஸான் அருகிலும் வந்துவிட்டனர். அமெரிக்கப் படைத் தளமான போஹாங்கிலும் போரிட்டனர். மக் ஆர்தர் ஐ. நா. சபைக்குத் தனது முதல் அறிக்கையை அனுப்பியுள்ளார். அதில் சேதம் அதிகம் அவர்களுக்கு ஏற்பட்டாலும், முன்னேறுகின்றனர். ஐ. நா. ஐக்கியப் படை அவர்கள் முன்னேற்றத்தைத் தாமதப்படுத்திற்று. இன்னும் ஐ. நா. மெம்பர் தேசங்கள் உதவியளிக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

நேரு, மார்ஷல் ஸ்டாலினுக்கும், அதுபோல் அமெரிக்காவுக்கும் கொரியா யுத்த நிறுத்த சம்மந்தமான தனிக் கடிதங்கள் எழுதியதை உலகு ஆவலோடு வரவேற்றது. பந்தோபஸ்து கவுன்ஸில்மூலமே இந்தத் தகராறைத் தீர்த்துக்கொள்வோம், ஆனால் சிகப்புச் சீனாவின் பிரதிநிதியை ஏற்றுக்கொள்ளட்டும் என்று கூறினார் ஸ்டாலின். சீனப் பிரதிநிதித்துவம் கொரியாவுக்கு சம்பந்தமில்லாத பிரச்சினை, அதனை இத்தோடு சேர்த்துக் குழப்பக்கூடாது என்று அமெரிக்கா பேசிற்று. உலகின் பல பாகங்களிலே இதுபற்றியே பேச்சாகிவிட்டது.

புதுக் கொந்தளிப்பு

பார்மோஸாவிலிருந்து, கம்யூனிஸ்ட் சீனாவையோ, கம்யூனிஸ்ட்டுகள் அங்குள்ள தேசிய இராசாங்கத்தையோ தாக்குவதை அமெரிக்கா சகிக்காது என்று கூறியுள்ளது. சீனக் கம்யூனிஸ்ட்டுகளைத் தாக்க சியாங்-கே-ஷேக் அனுமதி கோரியதையும் மறுத்துவிட்டது. பார்மோஸாவையும், அதற்கு அருகிலும் உள்ள தீவுகளை சீனக் கம்யூனிஸ்ட்டுகள் ஆக்கிரமிக்க முடியாதபடி அமெரிக்க 7-வது கடற்படை பாதுகாத்துவர உத்தரவிடப்பட்டிருக்கிறது. கொரியாப் பிரச்சினை குமுறிடும் எரிமலையாக இருக்கிறது. அதற்குள் இந்தப் பார்மோஸா பாய்ச்சல் புதியதொரு கொந்தளிப்பை யுண்டாக்கிவிடுமோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது.

வளரும் பிரச்சினை

காஷ்மீரக் காய்ச்சல் வளர்ந்துகொண்டே போகிறது. தீர்ந்துபோக வேண்டிய உள் நாட்டுப் பிரச்சினை, இரு தேசங்களின் பிடிவாதத்தினால் அகில உலகச் சேதிகளில் ஒன்றாக்கப் பட்டுவிட்டது. ஐ. நா. சபை இந்தப் பிரச்சினையைப் பற்றிய ஒரு முடிவு காண, நடுநிலைமையாளராக சர். ஓவன் டிக்ஸன் என்ற அறிஞரை அனுப்பிற்று. அவர், இருநாட்டுப் பிரதமர்களுடனும் நாட்கணக்கில் பேசினார். முக்கூட்டு சம்பாஷணையின் முடிவு இன்னமும் தெரியாவிட்டாலும், சுமுகமான சமாதானத் தீர்மானத்திற்கே வந்திருப்பர் என்று அறிய ஏது இருக்கிறது. குழந்தை நாடுகள் என்று கூறும் நிலைமைதான், பாகிஸ்தான், இந்தியா ஆகியவைகளுக்கு இருக்க முடியும்! பிறந்தே மூன்றாண்டுகள்—இப்படி இருக்கும்பொழுது ஆக்கிரமிப்பு, சண்டை, சச்சரவு என்று சாதாரண பிரச்சினைகளுக்கெல்லாம் சல்லடங் கட்டக்கூடாது. முன்னர் நேரு - லியாகத் உடன்படிக்கை, இந்த உண்மையை அவர்கள் உணர்ந்துவிட்டார்கள் என்று கூறிற்று. இப்பொழுது இந்தக் காஷ்மீரப் பிரச்சினையின் முடிவும் அதனை வலியுறுத்துவதாகவே அமையும் என்று அரசியல் வட்டாரங்கள் ஆருடங் கணிக்கின்றன.

*

தூத்துக்குடி உப்புத் தொழிலாளர் அவதி

உண்மைக்குப் பாடுபட்டாலே, இன்றைய ஆளவந்தாருக்கு எரிச்சலாகப் படுகிறது. ஏழைகளின் கண்ணீரைக் காட்டுவதோ, இதைத் துடைத்து ஏதாவது வழி செய்யுங்கள் என்று கூறுவதோ, 'தேசத் துரோகம்' எனக் கருதுகின்றனர். எண்ணம் எப்படிப் போகிறதோ, அப்படியெல்லாம், நடக்கின்றனர்.

ஹிட்லரின் ஆட்சியாகவோ அல்லது எமதிஷ்டப்படிதான் நடப்போம் என்கிற ஜாரின் காலமாகவோ யிருந்தால்கூட, 'இப்படித்தானே, நடக்கும்' என்று கூறிவிடலாம். இவர்கள், அவர்களல்ல! 'எங்களிஷ்டப்படியே ஆட்சி நடத்துவோம்' என்று கூறியவர்களுமல்ல. 'மக்கள் நன்மைக்காக, மக்கள் விருப்பமறிந்து ஆள்வதே எங்கள் சுயராஜ்யத் தத்துவம்' என்று பேசி, இன்று ஆட்சியிலமர்ந்தவர்கள். சிறையையும், அடக்கு முறையையும் காட்டிய ஆங்கிலேயர் ஆட்சியை 'ஆதிபத்ய வெறியர்'கள் என்று கூறி, கண்டித்தவர்கள்.

இருந்தும், இன்று சிறிது கூடச் சஞ்சலப்படாது—ஆங்கிலேயர் ஆட்சியையும் மிஞ்சும் வகையில் நடக்கிறார்கள்.

தூத்துக்குடியிலிருந்து வந்திருக்கும் செய்தி, இது: 11—7—50 அன்று நமதியக்கத் தோழரும் உப்புத் தொழிலாளர் சங்கத் தலைவருமான கே. வி. கே. சாமி, மற்றும் செவத்தையா பாண்டியன், மந்திர நாடார், கருமலையார், ஏசுதாசன், ராயப்ப நாடார், பால் நாடார் முதலாய தோழர்களை, கைது செய்து பின்னர் விடுவித்தனராம்—கைது செய்ததற்கு எந்தவிதமான காரணமும் கூறப்படவில்லையாம்!

தூத்துக்குடி உப்புத் தொழிலாளர்கள் நீண்ட நாட்களாகவே சிற்சில கோரிக்கைகளைக் கோரிவந்திருக்கின்றனர். அவைகளில் முக்கியமானது—பேக்டரி சட்டப்படி முதலாளிகள் நடக்கவேண்டும்.

முதியோர் சங்கம், விளையாடுமிடம் முதலியவற்றிற்கான இடவசதி வேண்டும்.

ஹார்வி மில்லிலிருந்து நீக்கப்பட்ட 350-தொழிலாளர்களையும் மேற்படி ஆலையினர் மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடிப்படைச் சம்பளம் ரூ 80 ஆகயிருக்க வேண்டும். விலைவாசிக்குத் தக்கப் பஞ்சப்படி வேண்டும்.

ஆண்—பெண் என்று உப்பளத் தொழிலாளர்களுக்குள் வேற்றுமை காட்டாது சரிசமமான கூலி கொடுக்கவேண்டும்.

இவைதான்—அந்தக் கோரிக்கையில் காணப்படுபவை. இவை நியாயமற்றவை என்று கூறிவிட முடியாது. இருந்தும், இவைகளை 'ஏன்' என்று கேட்பவர்களைத் தனது அதிகாரத்தால் மிரட்டுகின்றனர் ஆட்சியாளர்.

இது நல்லதல்ல — இப்போக்கு கேடு விளைவிக்கும் என்று ஆளவந்தாரை எச்சரிக்கிறோம். உப்பளத் தொழிலாளரின் நியாயமான கோரிக்கைகளை ஆலோசித்து, அவர்களுக்கான நீதி வழங்கவேண்டுவது அவசியமென வற்புறுத்துகிறோம்.

கருத்து விருந்து! சரித்திரச் சித்திரம்!

மூன்றே நாட்களுக்கு

தஞ்சை இராமநாதன் செட்டியார் ஹாலில்

ஜூலை 29, 30, 31 தேதிகளில் இரவு 10-மணிக்கு

சி. என். அண்ணாதுரை தீட்டிய

சந்திரமோகன்

நாடகம் நடைபெறும்

ஈ. வி. கே. சம்பத், எஸ். எஸ். இராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி, ஏ. எம். மருதப்பா, எம். என். கிருஷ்ணன், பி. ஆர். இலட்சுமிபதி, பி. எஸ். வெங்கடாசலம், ஜி. எஸ். மகாலிங்கம் பி. எஸ். சொக்கலிங்கம், எம். என். முத்து, கார்க்கோல்ராஜ், தாமோதரன் முதலியோர் நடிக்கின்றனர்.

Advt கரந்தை நாடகப் பண்ணை

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at Dravida Nadu" Press
95, Tirukkachinambi Street, Kancheepuram.